மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

UNIVERSITY LIBRARY
08 APR 2014
PERIODICAL DIVISION

# செஞ்சக்தி

2014 மார்ச் அனி 09 புனை 16
விலை ரூபா 20.00

LIBRARIAN'S OFFICE
RECEIVED
01 APR 2014
LIBRARY
UNIVERSITY OF JAFFNA




# ஜே.வி.பியின்
# பரந்த தேர்தல் முன்னணி

**எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கம் நடாத்துவதற்கு எதிர்பார்க்கும் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு பரந்தளவிலான தேர்தல் முன்னணியை கட்டியெழுப்புவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகி வருகிறது.**

இதற்காக அனைத் முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைப்பதற்கு எதிர்பார்க்கும் மக்கள் விடுலை முன்னணி கடந்த பெப்ரவரி 07ம் தி-கதி மாநாட்டில் அனுமதிக்கப்பட்ட ஐவகை கொள்கை திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மக்கள் மய அரசாங்கத்தை அமைப்பதே இதன் இறுதி நோக்கமாகும். குறிப்பாக வெளியிடப்பட்டுள்ள புதிய கொள்கை திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி நாட்டின் கல்விமான்களுக்கு, புத்திஜீவிகளுக்கு, வியாபாரிகளுக்கு, மதத் தலைவர்களுக்கு அண்மையில் கையளித்ததோடு அதற்கு அவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் கிடைத்தது. பல்கலைக்கழக தொழில் சங்க சம்மேளனம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை முதலீட்டு சபை போன்றவற்றின் புத்திஜீவிகளுக்கும் அனைத்து மதத் தலைவர்களுக்கும் சமாப்பித்துள்ளது. அதேபோன்று சில மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு மக்கள் மத்தியில் இப் புதிய கொள்கை திட்டம் குறித்து ஒரு கருத்தாடலை ஆரம்பித்துள்ளது. இதில் பெரும்பாலான இடங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கு பல புதிய யோசனை-கள் சமர்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி எதிர்கட்சிக்கு தலைமை தாங்க முடியாத ஓர் சூழலில் மக்கள் விடுதலை முன்னணி இப் பொறுப்பை ஏற்று செயல் பட வேண்டும் என்றும் அரசாங்கத்தின் தான்தோன்றித் தனத்துக்கு எதிராக முகம் கொடுக்க கூடிய வகையில் ஓர் வெகுஜன முன்னணியை வெகு விரைவில் அமைக்க வேண்டும் என்ற யோசனை இவற்றுல் அடங்கும் முதன்மையான விடயமாகும்.

ஊழல், மோசடிகள் இல்லா நியாயமான சமுதாயமும், தொழலில் நுட்ப ரீத-ியில் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட பொருளாதார திட்டமும், வளர்ச்சி பெற்ற மனித வளத்துடனான மக்கள் மய ஆட்சி போன்றவற்றை உள்ளடக்கிய கொள்கை திட்டத்துடன் தமக்கும் ஒன்று சேர முடியும் என்று பல வெகுஜன அமைப்புகளின் அங்கத்தவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதற்காக கட்சி வேறுபாடின்றி ஒன்றிணையக் கூடிய பொது நிலையமொன்றை நிர்மாணிக்கும் படி பல கோரிக்கைகள் வெளியாகியுள்ளது.

இந்நிலமைகளை கருத்தில் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு பரந்தளவிலான தேர்தல் முன்னணியொன்றை கட்டியெழுப்புவதற்கு முடிவெடுத்துள்ளது.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலின் பின்னர் இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்திருக்கிறது.



03
வனாதமுல்லை மக்களை அனாதை.....


05
சரியாக இனங்காண வேண்டிய.....


06
ராஜபக்ஷாவையும் அமெரிக்காவையும்.....


10
தேர்தல் நாடகத்தில்......


நீதியான தேசம், நேர்மையான சமுதாயம், அடிமையில்லாமனிதன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அரத்தமுள்ளதாக வேண்டிய சர்வதேச பெண்கள் தினம்



வரலாறு எமக்கு பல பாடங்களை கற்றுத் தந்துள்ளது. அவ்வாறான பாடங்களை கற்றுத்தந்த வரலாற்று ரீதியான சம்பவங்கள் திரிபுபடுத்தப்பட்டு தற்காலத்தில் ஒரு சிறு கும்பலின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் 08ம் திகதி சர்வதேச பெண்கள் தினமும் அதே நிலையையே எதிர்கொண்டுள்ளது. நமது நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் சர்வதேச பெண்கள் தினத்தை ஒரு செயலமர்வுக்கான தினமாகவே கருதுகின்றனர். அதாவது அலங்கார செயலமர்வு, கேக் வெட்டும் செயலமர்வு உள்ளிட்ட வெறும் அலங்காரத்திற்கான நாளாக மாற்றப் பட்டிருக்கிறது. அவ்வாறு அவர்களை சிந்திக்கும் படி ஆட்சியாளர்களும் ஒருசில வியாபாரிகளும் பலவேறு ஊடகங்களை பயன்படுத்தி பெண்களை தொடர்ந்தும் ஏமாற்றி, அவர்களை கனவுலகில் சஞ்சரிக்க விட்டுவிட்டு, தமது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதாவது பெண்களை தொடர்ந்தும் சுரண்டி சூரையாடுவதற்கான முயற்ச்சிகளையே இவர்கள் மேற்கொண்டு வருவதை காணமுடிகிறது.

1910ம் ஆண்டு கோபன்ஹேகன் நகரத்தில் நடைபெற்ற சோஷலிச பெண்களின் இரண்டாவது சர்வதேச மாநாட்டில் சர்வதேச பெண்கள் தினம் தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்தவர் ஜெர்மன் நாட்டு சோஷலிச தலைவியான கிளாரா செட்னிக்காகும். அதற்கான காரணம் நிவ்யோர்க் நகரத்தில் ஊசி உற்பத்தி தொழிற்சாலை பெண் ஊழியர்களால் 1908 மார்ச் 08ம் திகதி முதல் இரண்டு வருடங்களாக கொண்டுச் சென்ற போராட்டமாகும். அமெரிக்க பெண்கள் அன்று மிகவும் கஷ்டமான சிறுதொகை சம்பளத்திற்கு தமது உழைப்பு சுரணடப்படுவதற்கும், பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராகவும், தொழிசங்க உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், மற்றும் பெண்களுக்கு சர்வசன வாக்குரிமையை பெற்றுக் கொள்வதற்காகவும் போராடி வந்தனர். ஒவ்வொரு வருடமும் மார்ச 08ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக நினைவு கூறப்படுவதற்கான பிரதான காரணம் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொழிலாளர் பெண்களின் போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தை வகிப்பதினாலாகும்.

உலகம் முழுவதிலும் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்திற்காக போராடுகின்ற உழைக்கும் பெண்களின் ஒன்றிணைவை சர்வதேச பெண்கள் தினத்தின் மூலமாக முன்னெடுப்பட வேண்டியிருக்கின்ற இத்தருணத்தில் நமது நாட்டில் பெண்கள் தினத்தை சொந்தமாக்கிக் கொண்டிருப்பது உழைக்கும் பெண்கள் அல்ல ஆட்சியாளர்களின் அனுசரணையுடனான வியாபாரிகளாகும். தமது பொருட்களை விற்பதற்கும், பொருட்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கும் இன்னுமொரு நாளாக இந்த பெண்கள் தினம் மாற்றப்பட்டுள்ளது. பெண்கள் தினத்தில் மட்டும் பெண்களின் உரிமை, பெண்களின் சுததந்திரத்தைப் பற்றியும் பொய்யாக பீற்றுகின்ற மற்றும் பெண்களுக்காக போலி காளியாட்ட நிகழ்வுகளை முனனெடுக்கிற நிலமைகளில் நமது நாட்டு பெரும்பான்மையான பெண்களின் நிலையென்ன?

தினமும் வெளிவரும் பத்திரிகைகளை கவனமான ஆராய்கின்றபோது வன்முறைக்கு, துஷ்பிரயோகத்திற்கு, கொலை செய்யப்படும் பெண்களின் செய்திகளையே காணமுடிகிறது. அவ்வாறான செய்திகளை காணமுடியாத நாளை எம்மால் கண்டுபிடிக்க முடியாத நாளாகும். அண்மைகால வடக்கு கிழக்கில் பெண்களில் நிலமைகளை எடுப்போமானால் யுத்தம் அவர்களை விதவைகளாக்கியுள்ளது, அவ்வாறு விதவைகளாக்கப்பட்ட பெண்கள் ஐம்பதியிரத்தை தாண்டிருப்பதாக செய்திகள் கூறுகிறது. காணாமல் போன தமது கண்வன்மார்களை தேடியலையும் பெண்கள், காணமல்போன் தனது மகனை தேடியலையும் தாய்மார்கள், பெற்றோரை இழந்த பெண் பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள் தமது பிள்ளைகளின் பசியை போக்க முடியாது தற்கொலை செய்து கொள்கின்ற நிலை, அதேபோன்று என்றுமில்லாத வாறு பாலியல் துஷ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கு பெண்கள் இன்று பாரிய துன்பங்களை அனுபவித்து வருகின்றபோது, ஆட்சியாளாளும், அரசியல்வாதிகளும், அதேபோன்று வியாபாரிகளும் இப் பிரச்சினைகளை தமது இருப்பிற்காகவும் தமது வியாபார நலன்களுக்காகவும் பயன்படுத்தி வருவதையே காணமுடிகிறது.

மலையகத்தில் வாழுகின்ற பெண்களின் நிலமையை எடுத்துக் கொண்டால் 180 வருடங்களாக இந்நாட்டிற்காக தமது நான்கு தலைமுறையினரின் இரத்தம், வியர்வை, இறுதியாக தமது உடல்களையும் இந்த நாட்டின் தேசிய வருமானத்தை பெற்றுக் கொடுப்பதற்காக உரமாக்கியுள்ளனர். ஆனால் இன்று சகல வழிகளிலும் மலையகப் பெண்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர். அதாவது உழைப்புச் சுரண்டல் மூர்க்கத்தனமாகியுள்ளது. ஆனால் இன்றும் தமது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத மக்களாகவே இருந்து வருகின்றனர் அதில் கூடுதலாக பாதிக்கப்படுவோர் பெண்களாகும். இன்று இரத்தச் சேகையால் பீடிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிப் பெண்ணகள் கூடுதலாக இருப்பது மலையகத்திலாகும். இவ்வாறான இலங்கையில் மிகவும் மேசமாக சுரண்டப்படுகின்ற பெண்கள் தோட்டத்தில் உழைக்கும் பெண்கள் என்றால் அது மிகையாகாது. ஆனால் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் தமது இருப்பினை தமது ஆதிக்கத்தினை தக்கவைத்துக் கொள்வதற்காக மலையகப் பெண்களை பகடைக்காய்களாக மாற்றியிருப்பதை காண முடிகிறது. இவர்களால் பெண்கள் தினத்தை இரட்டிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

நமது நாட்டில் எல்லா பெண்களும் பொருளாதார சமூக பிரச்சினைகளால் பிழியப்பட்டு வருவதை காண முடிகிறது அது இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்களென வேறுபாடின்றி ஒடுக்கப்பட்டு வருகின்றனர். அதாவது சமூக அநீதிக்கு உள்ளாகியும், பலவிதமான வன்முறைகளுக்கு, பாலியல் துன்புறுத்தல்களுக்கு, உள்ளாகி வாழுவோர் பெண்களாகும். ஆனால் தற்பேதைய ஆட்சியாளர்கள் பெண்களின் வாழ்க்கை நிலையையோ, சமூக நிலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, குடு (ஹெரோயின்) எத்தனோல், கெசினோ களியாட்டங்கள் கொடிகட்டிப் பறக்கின்ற சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான டவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அழுகி துர் நாற்றமெடுத்து நாறிப்போயிருக்கும் முதலாளித்துவ முறையில் நாளைய தினம் மென்மேலும் ஒடுக்குமுறைக்கு இறையாக போவது இளம்வயது, வயதுவந்த முதிய பெண்களாகும். அதனால் நாடடில் பெரும்பான்மையானவர்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி வரும் தற்போதைய முதலாளித்துவ முறைக்கு எதிராக போராடுவதற்கும், சமத்துவத்தின் அடிப்படையில் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை அடைவதற்காக பெண்கள் அணிதிரள வேண்டும். அப்போதே பெண்கள் தினத்தின் உண்மையான நோக்கம் அர்த்தமுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## சோஷலிசத்தை நோக்கி முன்னோக்கியா? காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி பின்நோக்கியா?

"மனித குலம் சோஷலிசத்தை நோக்கி முன்னோக்கி அல்லது காரட்டுமிராண்டி தனத்தை நோக்கி பின்நோக்கி செல்ல வேண்டிய தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது" எனும் பிரசித்தமான கூற்றை இன்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் எங்கெல்ஸ் கூறினார். முதலாளித்துவத்தின் நெருக்கடி சமூகத்தை தள்ளியிருக்கும் கவலைக்கிடமான நிலையைப் பற்றி முன்னமே புரிந்து கொண்ட எங்கெல்ஸ் அவ்வாறு கூறியிருந்தார். இப்போது இலங்கை சமூகமும் அதே நிலையை அடைந்துள்ளது. இலங்கையின் முதலாளித்துவ முறைக்கு சமூகத்தை முன்நோக்கி கொண்டுச் செல்ல முடியாதெனவும் அதனால் மனித சமூகத்தை மிலேச்சத்தனத்தை நோக்கியே கொண்டுச் செல்ல முடியுமென்பதை தற்போதய நிகழ்வுகள் நிரூபித்த வண்ணமிருக்கிறது.

அண்மைக் காலங்களில் ஊடகங்களில் வெளியான சில செய்திகளை கவனத்திலெடுப்பதன் மூலம் இதனை புரிந்துக் கொள்ளமுடியும். கடந்த வாரம் மூன்று பாடசாலை மாணவிகள் தற்கொலை செய்து கொண்டதாகவும் அதில் இருவர் 'பேஸ்புக்' பற்றிய பிரச்சினையின் காரணமாகவும் மற்றையவர் கையடக்க தொலைபேசி பற்றிய எழுந்த பிரச்சினையின் காரணமாக மன அழுத்தத்தால் ஏற்பட்டவையெனவும் தெரிய வருகிறது. பாடசாலை பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்வதற்கான உண்மையை கண்டறிந்து மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக அதிகாரிகளின் கவனம் 'பேஸ்புக்' தடைசெய்வது பற்றியே திரும்பியுள்ளது. இதற்கு சில வாரங்களுக்கு முன்னர் மக்களை அதர்ச்சிக்குள்ளாக்கும் செய்தியொன்று வெளியானது. அது வறிய குடும்பத்தின் தாயொருவர் தமது பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு உணவின்றி பாகற்காயை அவித்து கொடுத்துள்ளார் என்பதாகும். (இந்த சம்பவத்தின் பின்னர் அதிகாரிகள் பாகற்காய் பயிரிடுவதை தடைசெய்வதை பற்றிய கவனம் திரும்பாமை அதிர்ஷ்டமாகும்) அதற்கு முன்னர் கற்குகையில் வாழ்ந்த ஒரு குடும்பத்தை பற்றிய செய்தி வெளியானது. இதனிடையே அண்மையில் தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக பணத்தை தேடுவதற்கு மாகாண சபை வேட்பாளர் ஒருவர் தங்க் நகை கடையொன்றை கொள்ளையிட்டுள்ளார். இதறந்கு புறம்பாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றச்செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, போதைபொருள், கள்ளச் சாராயம் கொண்டுவருதல் மூலமாகவும் அவைகளை கொண்டுவருவோர் வேறு யாருமல்ல அதிகாரத்திலிருக்கும் நபர்களே என்பதினால், இலங்கை சமூகம் காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி மிகவேகமாக சென்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கை சமூகம் தற்போது இறையாகியிருப்பது, முதலாளித்துவ அராஜகத்திற்காகும். இந்த அராஜகமானது முழு சமூகத்தையும் நடோடிகளாக்கியுள்ளது. முதலாளித்துவத்தின் சகல நிறுவனங்களும் அழுகி துர்நாற்றமடிக்கிறது. நாட்டில் சட்டம் ஒழுங்கில்லை. சட்டத்தை பொருட்படுத்தாது செயற்படுவோர் ஆளும் தரப்பிலேயே உள்ளனர். சட்டத்தை பாதுகாக்க வேண்டிய நீதிமன்றம், பொலிஸ் அனைத்தும் ஆளும் வர்க்கத்தின் பிடியில் சிக்கியுள்ளது. அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு இருக்கும் அரசியல் கட்சி மேடைகளில் ஏறும் தடையை முதலில் மீறுபவராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷா மாற்றியிருக்கிறார். இதன் காரணமாக பொலிஸ் தேர்தல் ஆணையாளர் தேவையற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டம் எதிர்க் கட்சிகளுக்கு மட்டும் பொருந்துகிறது. உங்களது சட்டத்தை நீங்களே மீறுவீர்களென்றால் நாங்கள் எதை பாதுகாக்க வேண்டுமென மக்கள் கேட்பது இவ்வாறான நிலைமையிலாகும்.

நாட்டில் நிர்வாகம், ஒழுக்கம் இல்லாதபோது காட்டுச் சட்டமான பலமுள்ளவரால் பலவீனமானவரை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் நிலைத் தோன்றும். நாட்டில் பொருளாதார தந்திரோபாயம் இல்லாதபோது மக்கள் கையில் கிடைக்கின்ற அனைத்தையும் விற்பதற்கு முனைகின்றனர். இயற்கையை அழித்து எப்படியாவது பணம் சம்பாதிக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இவையணைத்தும் சிறந்ததோர் சமூகத்தின் அறிகுறியல்ல. மிலேச்சதனமான சமூகத்தின் போக்குகளாகும்.

சமூகம் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து நற்பண்புள்ள நிலைக்கு பரிணாம் அடைய வேண்டியபோதிலும் முதலாளித்துவம் அதை மீண்டும் காட்டுமிராண்டித்தனத்தை நோக்கியே கொண்டுச் செல்கிறது. இதை உடனடியாக நிறுத்த வேண்டும். மனித சமூகம் முன்னேற்றத்தை நோக்கி கொண்டுச் செல்ல வேண்டும். அதற்காக முதலாளித்துவத்தை தோற்கடிக்க வேண்டும். சோஷலிசத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மீள்வதற்கு அதைவிட வேறு வழி மக்களுக்கு கிடையாது.

## அபிவிருத்தி எனும் பெயரில் வனாதமுல்லை மக்களை அனாதையாக்கிய அரசாங்கம்!



அபிவிருத்தி எனும் பெயரில் மக்களை பிடுங்கி எரியும் புல்லுகளாக கருதுவது கவலைக்குரிய விடயமாகும். என்று வனாதமுல்லை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்கடத்தல் பற்றி உரிய விசாரணை நடாத்தி குற்றவாளிகளை இனம்கண்டுள்ளீர்களா? என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்றக் குழுத் தலைவர் அனுர திசாநாக்க அவர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரங்கள் கீழ் வருமாறு,

"கொழும்பு மா நகரசபைக்கு சொந்தமான பிரதேசத்தில், தற்போது தொடர்ச்சியாக பொதுமக்களின் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் தான்தோன்றித்தனமாக உடைக்கப்பட்டு அப் பிரதேசங்களிலிருந்து அவர்கள் அகற்றப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக அவர்களால் பல வருடங்களாக கட்டியெழுப்பட்ட உடமைகள் அழிக்கப்பட்டு வருவதுடன் அவர்களின் பொருளாதார சமூக வாழ்க்கை தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இது தொடர்பாக கேள்வி எழுப்பிய மக்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரச் சபை கூறியிருப்பதாவது. நகர புனர்வாழ்வு திட்டத்தின் கீழ், இவ்விடங்களும் அதிலுள்ள குடியேற்றங்களும் அகற்றப்படுகிறது என்றாகும். ஆனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கம்பனிகளுக்கு தாரைவார்ப்பதற்காக அரசாங்கம் இந்த இடங்களை கைபற்றி வருவது நாம் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அபிவிருத்தியெனும் பெயரில் மக்களை களையெடுப்பதைப் போன்று பிடுங்கி எறிவது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு மக்கள் அகற்றப்படுகின்ற நட்வடிக்கைகள் அனைத்தும், நகர அபிவிருத்தி அதிகாரச் சபையின் பெயருக்குள் மறைந்து கொண்டு இராணுவ அதிகாரிகளே இதில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு இராணுவத்தின் தலையீடானது முற்றிலும் சட்டவிரோதமானது, இந்த நடவடிக்கையில் இராணுவத்தின் தலையீடானது அப்பிரதேச மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது. ஆனால் இவ்வாறு இராணுவத் தலையீட்டைப் பற்றி அரசாங்கம் தெரிவிக்கையில், 2013 ஜுலை மாதம் 03ம் திகதி இல 1817/31 வரத்தமாணி அறிக்கைக்கு அமைவாகவே இராணுவம் தலையிடுவதாக கூறப்படுகிறது. ஆனால் அந்த வர்த்தமாணியின் படி இராணுவத்தை பயன்படுத்த முடிவது, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தில் 12 வது சரத்திற்கு ஏற்பவாகும். குறிப்பாக 12 (1) சரத்தில் கூறப்படுவதாவது, மக்களிடையே ஏற்படும் குழப்ப நிலையும் அந்த குழப்ப நிலையை தடுப்பதற்காக பொலிசுக்கு முடியாது போகும் பட்சத்தில் மட்டுமே அவ்வாறு முப்படைகளை அழைப்பதற்கான உரிமை உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் நேரடியாக இராணுவத்தை தலையிட வைத்திருப்பது, அவ்வாறு எதுவும் தோன்றாத நிலைமையிலாகும்

இவ்வாறு அகற்றப்படும் இடங்களான பஞ்சிகாவத்தை, அப்பல் தோட்டம், வடகொழும்பில் சில இடங்களும், தெமடகொடை, நாராஹேன்பிட்டி, காசல் வைத்தியச்சாலைக்கு அருகில் உள்ள பகுதிகள் இதிலடங்கும். இவ்விடங்களில் இராணுவத்தினர் நேரடியாக தலையிட்டே பொதுமக்களை அகற்றினர்.

இன்று இராணுவம் மேற்கூறிய வர்த்தமாணிக்கு மறைந்துகொண்டு எடுக்கும் நடவடிக்கை என்பது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கல்ல. நகர அபிவிருத்தி அதிகாரச் சபையின் ஊடாக தனிப்பட்ட அபிலாஷைகளை பூர்த்திசெய்வதையே இதற்கு பின்னால் மறைந்திருப்பதை காணமுடிகிறது. கொழும்பு நகரத்தில் இருக்கும் மிகப் பெறுமதிவாய்ந்த காணிகளை பெற்றுக்கொண்டு அக்காணிகளை பல்வேறு கம்பனிகளுக்கும், தனிநபர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கும், விற்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அதன்படி தாம் வாழ்ந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்ட மக்களுக்கு, அதற்குப் பதிலாக கம்பனிகளால் கட்டப்பட்ட கோழி கூடுகளைப் போன்ற சிறிய வீடுகள் வழங்கப்படுகிறது. தெமடகொடையில் அண்மையில் கட்டப்பட்ட ஆச்சரியத்தின் நகரமாக "மிஹிந்துசென்புற" அதற்கான சிறந்த உதாரணமாகும். அதன் அளவு 380 சதுர அடி என கூறப்பட்டப்போதிலும் அதில் 350 சதுர அடிகள் கூட இல்லை. 380 சதுர அடியில் குறைந்தது இரண்டு பேருக்கு மட்டுமே வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைட் மைதானத்தை நினைவுபடுத்திய மாஹரகம கூட்டம்







தோழா் அனுர திசாநாயக்க கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கடந்த பெப்ரவரி 14ம் திகதி நடைபெற்ற கூட்டம் 1970களில் தோழர் வீஜேவீர ஹைட் மைதானத்தில் நடாத்திய கூட்டத்தை நினைபடுத்தும் வகையில் அமைந்திருந்தாக ஜே.வி.பியின் ஆரம்பகால உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் அன்று மஹரகமை நகரத்தில் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்திற்கு ஜே.வி.பி. அங்கத்தவர்கள், அனுதாபிகளைவிட பொதுமக்களே அதிகமாக கலந்துகொணடிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும். அது மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைவரின் பேச்சைக் கேட்பதற்காகும்.

தேர்தலொன்றின் முகட்டில், மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக பரப்புரை செய்வோருக்கு பெப்ரவரி 14ம் திகதி நடைபெற்ற கூட்டம் சரியான பதிலடியை கொடுத்துள்ளது.

# தேர்தலுக்கு ஜே.வி.பி யின் பலம்வாய்ந்த முனன்ணி

பெப்ரவரி 04ம் திகதி ஜே.வி.பியின் தலைமையகத்தில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கைசாத்திடப்பட்டது. மற்றயை கட்சிகள் வேட்புமனுக்கள் கைசாத்திடுவதைப் போன்ற பிரச்சினைகள் ஜே.வி.பியில் கிடையாது. மற்றைய கட்சிகளில் வேட்பு மனுக்கள் ஒரு தனிநபரின் விருப்பத்திற்கமையவே இடம்பெறுகிறது. ஆனால் ஜே.வி.பியில் தகுதியான நபர்களே அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட வேட்பாளர்களை நோக்குமிடத்து தோழில்துறை சார்ந்தோர், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், முழு நேர அரசியலில் ஈடுபடுவோரும் அதில் அடங்குவர். மற்றயை கட்சிகளைப் போன்று மோசடிக்காரர்கள், மக்கள் சொத்துக்களை சூரையாடியோர் அதில் இல்லை. ஒரு சில கட்சிகளை போன்று தேர்தல் செலவுகளுக்காக கொள்ளையடிப்போர், பெண்களை. சிறுவர்கள் மீது துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டோர். கள்ளச் சாராயம் வடிப்போர் ஜே.வி.பியின் வேட்பு மனுக்களில் இல்லை. மக்கள் குரலை வெல்லவைக்கும், வேட்பாளர் பட்டியலையே இம்முறை ஜே.வி.பி முன்வைத்துள்ளது. கடந்த 06ம் திகதி 6 மாவட்டங்களுக்கு வேட்பு மனுக்களை பாரிய மக்கள் ஆரவாரத்துடன் தாக்கல் செய்தது.





## 'எமது நோக்கு'

# கொள்கைத் திட்டத்திற்கு

## பெரும் வரவேற்பு



ஜே.வி.பி யிடம் இருப்பது விமர்சனம் மட்டுமா, நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் கிடையாதா? என வினவியவர்களுக்கு சரியான பதில் அண்மையில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் கிடைத்திருக்கிறது. அது ஜே.வி.பி யின் 'எமது நோக்கு' கொள்கைத் திட்டத்தை வெளியிட்டதன் மூலமாகும். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முன்வைத்துள்ள மகிந்த சிந்தனை வெற்று வேட்டாக மாறியிருக்கும் நிலையில், ஐக்கிய தேசிய கட்சிக்கு வேலைதிட்டமொன்றை முன்வைக்க முடியாத நிலையில் ஜே.வி.பியின் எமது நோக்கு இலங்கை சமூகத்திற்கு ஒரு புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வேலைத்திட்டத்தை சமூக மயமாக்குவதற்காக காலி, மாத்தறை, மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கருத்தரங்குகளை நடத்தி அப்புத்தகத்தை இந்நாட்டில் முன்னிலை வகிப்போர்களான சட்டதரணிகள், வர்த்தக சமூகம், மற்றும் சகல மதத் தலைவர்களுக்கும் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி எடுத்து வருகிறது.

கடந்த பெப்ரவரி 18ம் திகதி "எமது நோக்கு" கொள்கைத் திட்டத்தை பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அனுர திசாநாயக்கா கையளித்தார். தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இக் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. அதில் விரிவுரையாளர் சங்கத்தின் தலைவர் சந்திரகுப்த தேனுவர, பொதுச் செயலாளர் ரொஹான் பெர்னான்டோ, கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிரி உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

# ஊழல் ஓடி மறைதல்

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சுனில் ஹந்துன்நெத்தி கடந்த ஜனவரி முதலாம் திகதி ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழவில் முறைபாடொன்றை செய்தார். ஆனால் அவ் ஆணைக்குழு அது தொடர்பாக எதுவிதமான விசாரணைகளையும் இது நாள்வரையில் மேற்கொள்ளவில்லை. மொத்த அரச இயந்திரமும் ராஜபக்ஷாக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டு வருவதால் இந்த விசாரணை பற்றி ஆச்சரியம் அடைய வேண்டியதில்லை. ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிரான முறைப்பாடு எதுவித விசாரணையுமின்றி வீசியெறிந்திருப்பது தெரிய வந்தததுடன். அது பற்றி விசாரிப்பதற்காக கடந்த 12ம் திகதி தோழர் சுனில் ஹந்துன்நெத்தி ஆணைக்குழவின் செயலாளரை சந்தித்தார். இவ் ஆணைக்குழு இதை பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளததன் காரணமாக நாம் நீதிமன்றத்தின் கவனத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அந்நிகழ்வில் கலந்துக் கொண்ட ஊடகவியலாளரிடம் தோழர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியாக இனங்காண வேண்டிய மார்ச் ஆபத்து

இந்த மார்ச் மாதம் இலங்கையும் இலங்கைவாழ் மக்கள் முன்னால் இரண்டு ஆபத்துக்கள் உள்ளன. இந்த இரண்டு ஆபத்துகளும் இரண்டு தேர்தல்களுடன் தொடர்புடைய ஆபத்துகளாகும். இவ்விரண்டும் இலங்கையின் எதிர்காலத்திற்கு மிகப்பெரும் பாதிப்பினை ஏற்படுத்தப்போகும் ஆபத்துகளாகும். அதில் முதலாவது மார்ச் மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக ஐக்கிய அமெரிக்காவினால் முன்மொழியப்படும் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பாகும். மற்றைய வாக்கெடுப்பு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எதிர்வரும் 29ம் திகதி நடத்தப்படவிருக்கின்ற தெற்கு மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலாகும். இந்த இரண்டு தேர்தல்களும் எதிர்காலத்தில் தமது நோக்கத்தை அடைவதற்காக நடத்தப்படுவதுடன் அவற்றால் நாடும் மக்களும் தோற்றுபோவதென்பது எதிர்காலத்தில் பாரிய ஆபத்தின் அடையாளமாக அமைவது தவிர்க்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானம் பற்றிய வக்கெடுப்பு எளிமையான ஒன்றல்ல. அது ஏகாதிபத்தியவாதிகளால் இலங்கையை தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, இலங்கையின் உள்ளக பிரச்சினைகளில் தமது தலையீட்டை சட்டப்பூர்வமான நிலைக்கு கொண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். இதற்கு முன்னரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது, மார்ச் இறுதியில் முன்வைக்கப்படும் தீர்மானமானது முன்னய தீர்னத்தின் தொடர்ச்சியாகும். அது மட்டுமல்ல, அது எதிர்காலத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் இதைவிட பயங்கரமான திர்மானத்திற்கு வழிசமைக்கின்ற ஒன்றாகும். மிக சுருக்கமாக கூறினால் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக முன்வைப்பதற்கு தயாராகியுள்ள தீர்மானம் வெற்றிபெறுமானால், சந்தேகமின்றி இலங்கை எகாதிபத்தியத்தின் தலையீட்டுக்கு முகம் கொடுக்க நேரிடுவது தவிர்க்க முடியாது. அமெரிக்க உள்ளிட்ட ஏகாதிபத்தியவாதிகள் இப்போது தயாராகி வருவது போர் குற்றம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு தேவையான நிலமையை, ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியை பெற்றுக்கொண்டு இலங்கை உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு அதை தமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வருவதேயாகும். ஐக்கிய அமெரிக்கா ஈராக்கில் தலையிட்டு



ஆக்கிரமித்ததும் அங்கு இராசயன ஆயுதங்கள் இருப்பதாக கூறி அதை விசாரிப்பதற்கென்றே உள் நுழைந்தனர். ஆப்கானிஸ்தானில் தலையிட்டதும் அங்கு அல்கைடா தலைவர் பின்லாடன் இருப்பதாக கூறியே உள்ளே நுழைந்தனர். அண்மையில் ஈரானுக்கு தலையிடுவதற்கான திட்டத்தை வகுத்ததும் அங்கு அணு ஆயுதங்கள் இருப்பதாக கூறியாகும். அதனால் ஐக்கிய அமெரிக்காவுக்கு இலங்கையில் சர்வதேச விசாரணைக்கு இடமளிப்பதென்பது நல்ல விடயமாக அமைய போவதில்லை. அது பாரிய அனர்த்தத்தின் அறிகுறியாகும்.

நாட்டுக்கு எதிராக வரும் இந்த ஆபத்தினை நன்கு புரிந்துக் கொண்டு, அதை தோற்கடிப்பதற்குப் பதிலாக, எகாதிபத்தியவாதிகளுக்கு மனித உரிமைகள் பற்றி குற்றச்சாட்டை விடுப்பதற்கு முடியாதபடி மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்குப் பதிலாக, அவ்வாறான நற்பண்புகளை வெளியிட்டு வாக்களிக்கவுள்ள நட்பு நாடுகளின் ஆதரவினை பெறுவதற்குப் பதிலாக, ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாடானது நாட்டின் முன்னால் தோன்றியிருக்கும் ஆபத்தை தமக்கு சாதகமாக்கி கொள்கின்ற தந்திரோபாயத்தையே கையாண்டு வருகின்றனர். நாட்டிற்கு எதிராக தோன்றியிருக்கும் அந்த ஆபத்தினை, தமது அதிகாரத்தை தகக்வைபப்தற்கான ஊற்றாக மாற்றிக் கொண்டுள்ளனர். அதற்கிணஙக, மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடும் நாளில் ராஜபக்ஷ ஆட்சி இலங்கையிலும் வாக்கெடுப்பொன்றை நடத்துகிறது.

இன்னும் சில மாதங்களுக்கு கொண்டுச் செல்லபடவிருந்த பதவிகாலத்தை தேவையற்றிருந்த தென் மற்றும் மேல மாகாண சபைகளை களைத்துவிட்டு அரசாங்கம் தேர்தலை கொண்டு வந்ததேன்? அத்தேர்தலை மார்ச் 29ம் திகதியே நடத்துவதேன்? இதை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் பேரவை இம்மாதம் 27,28,29,ம் திகதிகளில் கூடுவதினால், அதன்போது இலங்கைக்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா மேலுமொரு தீர்மானத்தை கொண்டுவரவுள்ளது பற்றி அரசாங்கத்திற்கு நன்கு தொியும். அதை உண்மையிலேயே தடுக்க வேண்டுமென்றால் அரசாங்கம் செய்திருக்க வேண்டியது அத்தினத்தில் தேர்தலை நடத்துவதல்ல, அவ்வாறான நடவடிக்கைகளை பின்போட்டுவிட்டு மனித உரிமைகள் பேரவையின் ஐக்கிய அமெரிக்காவின் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு செயற்படுவதாகும். அதற்காக அரச அதிகாரிகளையும், அமைச்சர்களையும், தூதரக அதிகாரிகளையும் பயன்படுத்தி சர்வதேச மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளை செயற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் இவர்கள் அனைவரையும் பயன்படுத்தி மாகாணசபைத் தேர்தலில் வெல்வதற்கான நடவடிக்கைகளையே ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் உள்நோக்கம் அதிலிருந்து நன்கு புரிகிறது.

அரசாங்கத்தின் தேவையாகயிருப்பது மனித உரிமைகள் பேரவையின் வாக்கெடுப்பபை வென்று அத்தீர்மானத்தை தோற்கடிப்பதல்ல. அத் தீர்மானத்தைக் காட்டி மாகாணசபைத் தேர்தலில் வெல்வதாகும். கண்ணிரை விற்று தேர்தலில் வெல்வதாகும். அரசாங்கம் மார்ச் 29ம் திகதியே தேர்தலை நடத்துவது அதனாலாகும். சாதாரணமாக சட்டத்திற்கேற்ப எந்தவொரு தேர்தலிலும் தேர்தலை நடத்தும் திகதியை வேட்பு மனுக்கள் தாக்கல் செயய்ப்பட்ட பின்னராகும். ஆனால் இத்தேர்தலில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், தேர்தல் ஆணையாளர் திகதியை அறிவிக்கும் முன்னர் இந்த அரசாங்கத்தின் அமைச்சரான மகிந்த யாப்பா தேர்தல் நடைபெறும் திகதி 29 என அறிவித்தார். இப்போது கதை தெளிவாகிறது. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது தொடர்பாக நாட்டிற்கு அதர்ச்சியை ஏற்படுத்தும் நாளை பார்த்து மகிந்த ராஜபக்ஷ மாாச் 29ம் திகதியை தீர்மானித்தார். 29ம் திகதி தேர்தல் நடக்குமென மகிந்த யாப்பா வாய்விட்டார். இப்போது தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அதே தினத்தில் தேர்தலை நடத்துகிறார். அதாவது தேர்தல் திகதியை கூட அரசாங்கம் நிர்ணயித்திருப்பது மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் மூலம் தமது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்யாகும்.

மார்ச் இறுதியில் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படும் தீர்மானத்தை வெற்றிபெறுவது அமெரிக்காவுக்கு தீர்க்கமானதும் அவசியமானதுமாகும். அதேபோன்றே மாாச் 29ம் திகதி மாகாண சபைத் தேர்தலை வென்றெடுப்பது மகிந்த ராஜபக்ஷாவுக்கும் திர்க்கமானதும் அவசியமானதுமாக இருப்பதேன்? நாட்டில் படிப்படியாக அரசாங்கத்திற்கு எதிப்பு கிளம்பியிருப்பதை மகிந்த ராஜபக்ஷ நன்கு அறிந்துள்ளார். பலம்பொருந்தியதென கூறப்படும் அரசாங்கத்திற்கு எதிராக ஆங்கங்கு மக்கள் பிரிவினர் தமது பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கி போராடுவதுடன், அப் போராட்டங்களில் வெற்றியும் அடைந்துள்ளனர். ரத்துபஸ்வல போராட்டம் அவ்வாறான ஒன்றாகும். இறுதியில் பிரச்சினைக்குரிய தொழிற்சாலையை அகற்றிக் கொள்வதற்கு, அதன் உரிமையாளாகளுக்கு நேர்ந்துள்ளதுடன், அது அரசாங்கத்திற்கு கிடைத்த தோல்வியுமாகும். இப்போது வனாதமுல்லை மக்களின் வீடுகள் இல்லாதுபோகும் மக்கள் வீதியில் இறங்கி போராட்டததை ஆரம்பித்திருப்பதுடன், அப்போராட்டத்தில் அரசாங்கம் பின்வாங்கியுள்ளது. இந்த அரச எதிப்பு போராட்டம் மேலும் வலுவடைந்து தமது அதிகாரம் இல்லாது போய்விடுமென்று ராஜபக்ஷாக்கள் அஞ்சுகின்றனர். அதனால் அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மேலும் ஆறு வருடத்திற்கு தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதே இவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. அந்த அவசர ஜனாதிபதித் தேர்தலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்காக, காற்று வீசும் திசையை அறிவதற்கான திசையறி கருவியாக மகாணசபைத் தேர்தலை

(தொடர்ச்சி 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக தெரிவு
## தோழர் அனுர திசாநாயக்க மாஹரகமை கூட்ட



# ராஜபக்ஷாவையும் அமெ
# ஒரு பக்கம் வைத்
# நாம் மறு பக்கத்தில் நிற்

‘இன்று மகரகமையில் நடைபெறும் பொதுக் கூட்டமானது கடந்த இரண்டாம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் 7வது மாநாட்டை நடத்தி நமது நாடு எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடிகளைப் பற்றி கலந்துரையாடி, இதைவிட சிறந்ததொரு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான வேலைத் திட்டத்தை நிறைவேற்றி, அதற்காக கட்சியின் புதிய தலைமைத்துவத்தை அமைத்ததன் பின்னரே இந்த வெற்றிகரமான கூட்டம் நடைபெறுகிறது. 7வது தேசிய மாநாடானது வெறுமனே தலைமைத்துவ மாற்றம் மட்டுமல்ல. மக்கள் எதிர்கொண்டிருக்கின்ற சிரமங்களை இனங்கண்டு அதற்குப் பதிலாக மக்கள் நேயமுள்ள ஆட்சியை அமைக்கின்ற புதிய வேலைத்திட்டத்தையும் அங்கிகரித்து நிறைவேற்றியுள்ளோம்.

நமது நாட்டு மக்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அதாவது, விவசாயிகள் தமது அறுவடைக்கு நியாயமான விலை கிடைக்கவில்லையென புலம்புகிறார்கள், மீனவர்கள் தாம் பிடித்த மீனுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லையென புலம்புகிறார்கள். உழைக்கும் மக்கள் தமக்கு கிடைக்கும் சம்பளத்தில் வாழ்க்கையை கொண்டுச் செல்ல முடியாதென புலம்பகிறார்கள். வர்த்தக சமூகம் வியாபாரத்தை கொண்டுச் செலல் முடியாத நிலை தோன்றியுள்ளது. இளைஞர், யுவதிகளுக்கு சமூகத்திற்கு தொழிலொன்றை தேடிக்கொள்ள முடியாத நெருக்கடி, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின்மை வளாச்சி பெற்ற சுற்றுசுசூழல். சர்வதேசத்தின் முன்னால் நாடு பெரும் நெருக்கடியில் தள்ளப்பட்ட காலம் தோன்றியுள்ளது. எனவே, அனைவரினதும் குரலாக இருப்பது இந்த நாட்டை இப்படியே செல்ல விடவேண்டாம் அதை மாற்ற வேண்டுமென்ற கருத்தியலாகும். உங்களின் அந்த எண்ணங்களை யதார்த்தமாகும் நாள் வெகு தொலைவில் இல்லை. உங்கள் வயிற்றில் இருக்கும் மழலை, கையில் தவழும் மழலைகளுக்கு, கையில் தொங்கிகொண்டு பால் குடிக்கின்ற குழந்தைகளுக்கு நல்லதோர் நாடு வேண்டும். அதை ரணிலுக்கோ, மகிநதவுக்கோ பெற்றுக் கொடுக்க முடியாது. 66 வருடங்களில் 33 வருடங்கள் இருவரும் சரி பாதியாக நாட்டை ஆண்டுள்ளனர். அந்த இரண்டு கட்சிகளும் நாட்டை ஒரு அங்குலத்திலேனும் முன்நோக்கி கொண்டுச் செல்ல முடியாதென நிருபித்துள்ளனர்.

மகந்த ராஜபக்ஷ பிரதானமாக ஐந்து கேந்திரங்களை பற்றி கூறினார். அறிவின் கேந்திரம், மின்வலு கேந்திரம், கடல் கேந்திரம், ஆகாய கேந்திரம், வர்த்தக கேந்திரம், கடந்த ‘செகம்’ பொதுசலவாய மாநாட்டில் சுற்றுலா கேந்திரமென இன்னும் ஒன்று சேர்க்கப்பட்டது. நமது மின்வலுக் கேந்திரத்தை 32 மாதங்களில் 28 தடவைகள் உடைந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை வைத்துக் கொண்டு நாட்டின் மின்வலு கேந்திர நிலையத்தை உருவாக்குவது எப்படி? மின்சார சபைக்கு 2011-2012 இரண்டு வருடங்களில் ஏற்பட்ட நட்டம் 8042 கோடி ரூபாய். விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுப்பதற்கு 100 கோடி ரூபாய், வைத்தியசாலை மருந்துகளுக்கு 900 கோடி ரூபாய், சமூர்ததிற்கு 1400 கோடி ரூபாய், மிலுவலு கேந்திர நிலையத்தை உருவாக்கப்போகும் மின்சாரச் சபையின் நட்டம் 8,042 கோடி ரூபாய். பெற்றோலியக் கூட்டுதாபனத்தில் கடந்த இருண்டு வருடங்களில் ஏற்பட்ட நட்டம் 18,415 கோடி ரூபாய். மக்கள் மீது வரி அறவிட்டு, அபராதம் விதித்து பணத்தை விழுங்கும் பைரவர்களாக மாறியுள்ளனர். நமது நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளனர். விமான போக்குவரத்து கேந்திர நிலையமாக மாற்றவிருக்கும் இரண்டு நிறுவனங்களான மிஹீன் லங்கா, எயர் லங்கா கடந்த சில வருடங்களில் கோடிக்கணக்கான ரூபாய் நட்டமடைந்துள்ளது.

மத்தள விமான நிலையம் விமானங்கள் இறங்குவதற்கான கட்டணம் அறவிடாத விமான நிலையமாகும். கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு டொலர் 5000 அறவிடப்படுகிறது. மத்தளையில் டொலர் 2.500 அறவிடப்பட்டு வந்தது. அதையும் மகிந்த ராஜபக்ஷ வர்த்தமாணியின் மூலமாக நீக்கியுள்ளார். எனவே, இப்போது காற்று கேந்திர நிலையமாக மாறியுள்ளது. குடு, (ஹெரோயின்) எத்தனோல், கெசினோகளினாலான கேந்திர நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அறிவின் கேந்திர நிலையத்தை அமைப்பதாக வாய் சவடால் விட்ட போதிலும் 2005ல் மொத்த தேசிய வருமானத்தில் 3.59% வீதத்தை கல்விக்கான நிதியை ஒதுக்கிய அரசாங்கம் 2013ல் அதை 1.04% வீதமாக குறைத்துள்ளது. அறிவின் கேந்திர நிலையத்தை உருவாக்குவதற்காக இவ்வாறு அப்பாவி மக்களின் பிள்ளைகளை கல்வியிலிருந்து வெளியேற்றுவதன் மூலமாகவா? கப்பல் கேந்திர நிலையத்தை கப்பல் வராத அம்பாந்தோட்டை துறைமுகத்திலா? கொழும்புத் துறைமுகத்தில் புதிதாக இறங்குதுறையொன்று அமைக்கப்பட்டது. அது 2042ம் ஆண்டு வரை சீன அரசுக்கு சொந்தமானதாகும். ஆகவே, இந்த ராஜபக்ஷாவின் கேந்திரங்கள் குமிழ் கேந்திரங்களாக மாறியுள்ளது. அதற்குப் பதிலாக ஐந்து நெருக்கடிகள் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, ஜனாநாயகத்தை ஒழித்தல், குடு, எத்தனோல், கெசினோ வியாபிக்கப்படல், ஊழல் மோசடி தேசியப் பிரச்சினை, இவைகளே அந்த ஐந்து நெருக்கடிகளாகும். இறுதியாக ராஜபக்ஷாக்கள் கேந்திரங்கள் ஐந்துக்குப் பதிலாக ஐந்து நெருக்கடிகள் நிர்மாணித்துள்ளனர்.

அரசாங்கத்தின் ஊடகம் ஒன்றிருக்கிறது. நை (பாம்பு) டி.என் என்று காலை 7 மணிக்கு, பகல் 12 மணிக்கு அதற்கு வரும் அமைச்சர்கள் பொருளாதாரம் வளர்ச்சிளடைந்து வருவதாக கடுமையான வார்த்தைகளை பியோகித்து வருவதை காண முடிகிறது. ஒரு நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சியடையுமானால் கடையில் வியாபாரம் அதிகரிக்க வேண்டும். இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். பொருட்களின் விலைகள் குறைவடைய வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான நிதி அதிகரிக்கப்படல் வேண்டும். வைத்தியசலைகளுக்கு, மருந்துகளுக்கு ஒதுக்கப்படும் பணம் அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனால் இப்போது கடையில் பிஸ்னஸ் குறைந்துள்ளது. வேலைவாய்ப்பு குன்றியுள்ளது. கல்விக்கான நிதி வெட்டப்படுகிறது. மரணத்தை கொண்டுவரும் நோய்க்கும் வைத்தியச் சாலையில் மருந்தில்லை. ஆனால் மகிந்த பொருளாதாரம் ஏறியுள்ளதாக கூறுகிறார். இலங்கை வரலாற்றில் மிக மோசமாக பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ள காலமாகும். நாடு கடன் பொறியில் சிக்கியுள்ளது. கடந்த 2012ல் நாட்டின் வருமானம் 1051 பில்லியன் ரூபாய்களாகும். அபராதமிட்டு, வரி அறவிட்டு, இளைஞர் யுவதிகளின் திருமண பதிவுக்கும் 5000 ரூபாய் அறவிட்டு அரசாங்கம் ஈட்டும் தொகை அவ்வளவேயாகும். ஆனால் அதே வருடத்தில் கடனுக்காக 1074 பில்லியன் செலுத்தியது. நாட்டின் மொத்த வருமானத்தில் வட்டியும், கடன் தவணையும் செலுத்துவதற்குப் போதாது. மற்றைய அனைத்தையும் கடன் மூலமாகவே நிறைவு வேண்டியிருக்கிறது. அரச துறைக்கு சம்பளத்தை கொடுப்பதற்கு இலங்கை வங்கியில் கடன் பெறுகிறது. முழு நாடே வங்கியின் மேலதிக பற்றினாலேயே ஓடுகிறது.

அரசாங்கம் மக்களின் உணவு வகைகளுக்கும் வரி அறவிடுகிறது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கொத்தமல்லி ஒரு கிலோவுக்கு 202 ரூபாய் வரி அறவிடுகிறது. சீரகம் ஒரு கிலோவுக்கு 52 ரூபாய், சீனிக்கு 30 ரூபாய், வெள்ளை பூண்டுக்கு 40 ரூபாய், பருப்புக்கு 22 ரூபாய், பெரிய செமன் டின் ஒன்றுக்கு 105 ரூபாய், என மக்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்றனர். ராஜபக்ஷாக்கள் அன்றாட மக்கள் பாவிக்கும் அத்தியாவசிய பொருட்களுக்கு வரி வித்தே பணம் தேடுகின்றனர். அது மட்டுமல்ல அரசாங்கம் கல்விக்கு சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படும் நிதியையும் குறைத்துள்ளது.

இந்த மகிந்த ராஜபக்ஷ என்பவர் ஊடகங்களால் நிர்மாணிக்கப்பட்ட கட்டுகதையாகும். சுனாமி அனர்த்தத்தின்போது பணமோசடி செய்த தலைவர். 2004ல் மக்கள் பெரும் அனர்த்தத்தை சந்தித்திருந்தபோது வெளிநாடுகளிலிருந்து அனுப்பிய பணத்தை சூரையாடிய தலைவர். ஆட்சிபீடமேறியவுடன் ஊடகங்களைத் தாக்கினார். மகிந்த ராஜபக்ஷாவுக்கு எதிரான செய்திகள் ஊடகங்களில் வெளிவருவதில்லை. சில ஊடகங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவு செய்யப்பட்டதன் பின்னர்
ட்டத்தில் ஆற்றிய உரை



# மெரிக்காவையும் ந்துவிட்டு ற்க வேண்டும்.

மகிந்தவின் பெயருக்குப் பதிலாக பீப்..பீப்... சத்தமே கேட்கிறது ரோகண விஜேவீராவின் மைத்துனர் பேயாட்டம் ஆடினார் என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் முன்பக்கச் செய்தியில் வெளியான போதிலும், உண்மையாக பைத்திமாடும் ஸ்ரீ லங்கன் எயார் நிறுவனத்தின் நிசாந்த விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் என எழுதப்படுவதில்லை. சிரச ஊடக நிறுவனத்தின் மீது இரண்டு தடைவைகள் குண்டெறியப்பட்டது. இருதின சன்டே லீடர் அலுவலகம் தீவைக்கப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த சியத நிறுவனம் தாக்கப்பட்டது. லங்கா ஈ நிவ்ஸ் அலுவலகம் தீவைத்து கொளுத்தப்பட்டது. யாழ்பணத்தில் உதயன் அலுவலகம் பல தடவைகள் சுட்டும் தீவைத்தும் கொளுத்தப்பட்டது. லசந்த விக்கிரமசிங்க உள்ளிட்ட 11 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். போத்தல ஜயந்தவின் கால்கள் முறிக்கப்பட்டது. உபாலி தென்னகோன் அச்சுறுத்தப்பட்டார். இவைகளுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. அவை அனைத்திற்கும் பின்னால் அரசாங்கமே மறைந்திருக்கிறது. ஊடக நிறுவனங்களை அச்சுறுத்தி தமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. சில ஊடக நிறுவனங்களை விலைக்கு வாங்கியுள்ளது. சில ஊடக நிறுவனங்களில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு ஜனாதிபதியின் நிதியத்தில் வெளிநாட்டில் கல்வி பயிலுகின்றனர். ஆகவே அவர்கள் மகிந்த ராஜபக்ஷாவுக்கு எதிராக எழுதுவார்களா? நமது நாட்டில் உண்மை நிலை ஊடகங்களில் வெளி வருவதில்லை.

நமது நாட்டில் மக்கள் தமது வீடுகளை உடைக்க வேண்டாமென கூறும்போது வெள்ளை வேனில் வந்து தூக்கப்படுகின்றனர். பிரதம நீதியரசர் திவநெகும சட்டமூலத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கியதினால் அவரை விரட்டியடித்தனர். நாடடின் ஜனநாயகம், மனித உரிமைகள் சவாலுக்கு உள்ளாகி உள்ளது. நமது நாடு சர்வதேசத்திற்கு நல்லதோர் மேடையாக அமைந்துள்ளது. சிலர் ரணிலடன் சேர்ந்து மனித உரிமைகளை பாதுகாக்க மேடையில் ஏறுகின்றனர். நாம் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றோம். நமது நாட்டின் ஜனநாயகத்தை, மனித உரிமைகளை பாதுகாகக் முடிவது மக்கள் விடுதலை முன்னணிக்கு மட்டுமேயாகும். நமது நாடு குடு, எத்தனோல்களால் நிறைந்துள்ளது. இன்று குடு (ஹெரோயின்) மூட்டை மூட்டையாக வருகிறது. இந்த போதைப்பொருள் கொண்டு வரப்பட்டிருப்பது நமது பிள்ளைகளுக்கு போதையூட்டுவதற்காகும். பாகிஷ்தானின் காமினுக்கு கம்பளையில் இருக்கும் பிரதமரின் வீடு தெரிவதெப்படி? அதனால் மிகத் தெளிவாக இவர்களுக்கிடையே தொடர்பிருக்கிறது. எத்தனோல் கொல்கலன் கணகக்கில் இறக்கப்படுகிறது. ஒரு கொல்கலனில் 100 இலட்ச ரூபாய் சம்பாதிக்கின்றனர். குளிப்பதற்கு போதுமன அளவு எத்தனோல் கொண்டு வருவத யார்? இப்போது சராய முதலாளிகள், குடு முதலாளிகளே அரசாங்கத்தை நடத்துகின்றனர். வயம்ப சாராய குதம் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு சொந்தமானதாகும். ஹிங்குரான சாராயம் அரசாங்கத்தின் அமைச்சர் லக்ஷ்மனுக்கு சொந்தமானதாகும். குடு, கெசினோ ரேஸ் பை ரேஸ் காரார்களால் உருவான கூட்டணி அரசாங்கம் இது. இது வெள்ளை உடை தரித்த கள்ளர்களுடன் கும்மாளமிட்டுக் கொண்டு குடுவை ஒழிப்பதைப் பற்றி கதைக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷாக்களின் பக்தா திருட்டுக் கும்பல் பல கோடி ரூபாய்களை கொள்ளையடிக்கின்றனர். அண்மையில் மகிந்தாநந்தவின் மனைவி விவகரத்து நட்டஈடாக 5000 இலட்சம் ரூபாய் கேட்டார். மனைவிக்குத் தெரியும் மகிந்தாநன்தவிடம் அவ்வளவு பணம் இருக்கிறதென்று. இந்த பணம் யாருடையது? இவைகள் மக்களின் சொத்து மக்ந்தாநன்த என்வர் பெரிய திருடனல்ல. சிறிய திருடனாகும் சிறிய திருடன் இபப்டியென்றால் பெரிய திருடன் எப்படி இருப்பார்? மகிந்த ராஜபக்ஷாவின் மூன்றாவது மகன் ரோகித ராஜபக்ஷ பத்திரிகையொன்றுக்கு பேட்டி அளிக்கும்போது எதையாவது வாங்க வேண்டுமென நினைத்தால் அதன் விலையை பற்றி பொருட்படுத்துவதில்லை என கூறியிருந்தார். அவர் அணியும் சப்பாத்து லுவி விட்டோன் வகை சப்பாத்தென கூறியிருந்தர். லுவி விட்டோன் சப்பாத்தின் விலை ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமாகும். அவ்வாறு செலவளிப்பதற்கு இவர்களுக்கு பணம் எங்கிருந்து வந்தது? 2012.12.12. நாமல் ராஜபக்ஷவின் காலடன் விளையாட்டுக் கழகம் லம்போகினி ரக 19 கார்கள் இறக்குமதி செய்தனர். வரியின்றி அதன் பெறுமதி ரூபாய் 933 இலட்சமாகும். மகன் ரேசிங் கார் கொண்டுவரும்போது அப்பன் வரவு செலவில் ரேசிங் கார்களுக்கான வரியை குறைக்கின்றார். 933 இலட்ச ரூபாய் நாமல் ராஜபக்ஷாவுக்கு எங்கிருந்து வந்தது? பாராளுமன்ற உறுப்பினராகி நான்கு வருடம். அந்த நான்கு வருடத்தின் உண்ணாமல் உடுக்காமல் மிச்சம் பிடித்திருந்தாலும் கிடைப்பதோ 48 இலட்சமாகும். எயர் லங்கவின் தலைவர் மகிந்தரின் மைத்துனர், கல்வித் தகமை சாதாரண தரத்தில் சித்தியடையவில்லை. எயர் லங்காவின் நட்டம் 7000 கோடி ரூபாய். இம்முறை வரவு செலவில் எயர் லங்காவிற்கு 2600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இ.போ.ச (CTB) வுக்கு 50 கோடியே ஒதுக்கப்படுகிறது. விவசாயிகளின் ஓய்வூதிய கொடுப்பனவுக்கு 100 கோடியே ஒதுக்கப்படுகிறது. தமது மைத்துனருக்கு 2600 கோடி ரூபாய் ஒதுக்கிறார். மக்கள் சொத்துக்கள் பல கோடி ரூபாய்களை முறையற்ற விதத்தில் ஈட்டிய அனைத்தையும் நாட்டு மக்களின் கரங்களுக்கு கிடைக்ககூடிய மக்கள் நேயமுள்ள ஆட்சியொன்றை அமைக்க வேண்டியதன் காரணம் இதுவாகும்.

தற்போது சர்வதேசத்திலிருந்து பல சவால்கள் தொடுக்கப்பட்டுள்ளது. சிலர் மகிந்தரை கட்டித் தழுவிக் கொண்டு கால்களை நக்கிக் கொண்டு அமெரிக்காவை பொல்லுகளால் தாக்குகின்றனர். சிலர் அமெரிக்காவை தழுவிக்கொண்டு மகிந்தரை தாக்குகின்றனர். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி எல்லைக் கோட்டை சரிக இனங்கண்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷாவையும் அமெரிக்காவையும் ஒரு பக்கம் தள்ளிவிட்டு. மக்கள் ஒரு பக்கத்தில் நிற்க வேண்டும். இந்த மகிந்த ராஜபக்ஷாவுக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றபட் வேண்டுமென்பதே இவரது தேவையாகும். அப்போது தான் அவர் நெஞ்சில் அடித்துக் கொள்ள முடியும். உண்மையாகவே தீர்மானத்தை தோற்கடிக்க வேண்டுமென்றால் நல்லதோர் தூதுவர் சேவை இருக்க வேண்டும். அமெரிக்காவின் தூதுவராக தேயிலை வியாபாரி ஒருவரை நியமிக்கிறார். ரஷ்யாவுக்கு மகிந்தரின் சித்தியின் மகன் அனுபப்டுகிறார். இத்தாலிக்கு நாவலகே பெனட் குரே, மியன்மாரில் திக்வெல்ல எச். ஆர் பியசரி அவர் 88.89களில் மனித உரிமைகளை பாதுகாத்தது பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தில் இருப்பவர் கட்டுநாயக்க தனியார் துறை ஊழியர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தாக குற்றத்தை ஒப்புக் கொண்டு பதவி விலகிய முன்னாள் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவதாகும். அவருக்கு மனித உரிமைகளைப் பற்றி பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

அதனால் நமது நாட்டிற்கு பலமிக்க எதிர் கட்சியொன்று தேவைப்படுகிறது. பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக போராடுவது மக்கள் விடுதலை முன்னணி மட்டுமேயாகும். ஐ.தே.கவுக்கு இந்நாட்டின் எதிர்கட்சியின் பாத்திரத்தை வகிக்க முடியுமா? ஐக்கிய தேசிய கட்சியின் பிரச்சினை தலைமைத்துவ நெருக்கடியல்ல. அவர்களுக்கிருக்கும் பெரிய பிரச்சினை கொள்கை தொடர்பான நெருக்கடியாகும். ஏனென்றால் இந்த அரசாங்கம் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளையே நடைமுறைப்படுத்தி வருகிறது. அதனால் ஐ.தே.க தனியார் பல்கலைக்கழகம் அமைக்கும்போது அது அமைக்குமிடம் சரியில்லையெனக் கூறுகிறது. கெசினோ கொண்டு வரும்போது ஐ.தே.க அரசாங்கமாக இருந்த இவ்வளவு வரி சலுகை வழங்கப்பட மாட்டாது எனக் கூறுகிறது. ரவி கருணாநாயக்காவுக்கு, தயா கமகேவுக்கு, ஜோன் அமரதுங்காவுக்கு அரசாங்கத்தை எதிர்த்து நிற்க முடியுமா? மக்களோடு கைகோர்த்துக் கொண்டிருக்கும், மக்களின் பிரச்சினைகளுக்காக போராடும், கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும். நாங்கள் நாட்டை கட்டியெழுப்புவதற்கான கொள்கைத் திட்டத்தை முன்வைத்துள்ளோம். அது ஐந்து விடயங்களை அடிப்படையாக கொண்டதாகும். மக்கள் நேயமுள்ள ஆட்சி, உயரிய மனித வளம், நவீனமயம் மற்றும் தொழில்மயமாக்கப்பட்ட நாடு, நியாயமான சமுதாயம், அடிமையற்ற மனதனை கட்டியெழுப்ப வேண்டும். இப்போது இருப்பதோ மக்களின் சொத்துக்களை சூரையாடும் ஆட்சியாகும். நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தாக வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருக்கும் மகிந்தவின் எண்ணங்கள் தான் இந்நாட்டின் சட்டமாக மாறுகிறது. நாட்டின் மொத்த சொத்துகளில் 52% வீதம் மகிந்தரின் கையிலாகும். நாட்டின் மிக முக்கியமான நிறுவனங்களில் 80% வீதம் மகிந்தவின் கட்டுபாட்டிலாகும். அதேபோன்று நமது நாட்டில் அமைச்சரவையை குறைத்தாக வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியின் கீழ் அமைசச்ரவை 25 ஆக வரையறுக்கப்படும். நாம் அரசாங்கத்தில் இருக்கும்போது விவசாயம், காணி, நீர்பாசனம், கால்நடை அனைத்தும் ஒரு அமைச்சின் கீழேயே இருந்தது. இப்போது துண்டுதுண்டாக உடைக்கப்பட்டுள்ளது.

உலகத்தில் அதி நவின தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டு முன்னேறிய இலங்கையை உருவாக்க வேண்டும். உலகத்தில் அதிசிறந்த சினிமா கலை, இலக்கியத்தை இந்நாட்டிற்கு வரவழைக்க வேண்டும். அதன் மூலமாக மக்களின் எண்ணங்களை வளர்க்க வேண்டும். இன்று இணையத்தளங்கள், தொடர்பாடல் முன்னேறியுள்ளது. ஆனால் நம் நாட்டு தொலைகாட்சிகளில் காட்டுப்படுவது வீடுகளில் இருக்ககும் பிரச்சினைகளாகும். நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட நியாயமான கொள்கைகள் மீதான கட்டியெழுப்பட்ட நியாயமான சமுதாயம், இதைவிட நவீனத்துவம் நிறைந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். அதற்கான நோக்கு, தியாகம், அர்பணிப்பு இருப்பது மக்கள் விடுதலை முன்னணியிடமாகும் இந்நாட்டு தொழில் வல்லுனர்களுக்கு, இளைஞர்களுக்கு, பெண்களுக்கு, மாணவர்களுக்கு இடதுசாரி இயக்கத்தை கைவிட்டுச் சென்றவர்களுக்கு எமது கட்சியிலிருந்து ஒதுங்கி தூக்கத்திலிருக்கும் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம் அதற்கான சிறந்த பாச்சலை பாய்வதற்காக இந்த மாகாண சபை தேர்தலில் முன்னெடுப்போம். மக்களாக நம் அனைவருக்கும் அதைச் செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விலைகள் இல்லா, சீதனம் இல்லா, ஜாதிகள் இல்லா நாளைய தினத்தின் காதல் ஓவியம்



பெப்ரவிரி 14ம் திகதி சோஷலிச இளைஞர் சங்கத்தின் நாம் கல்கிசை கடற்கரையோரத்திற்கு புதியதொரு அனுபவத்துடன் சென்றோம். அன்று விசேடமான நாளாகும். அதாவது அன்று காதலர் தினமாகும். எனவே கல்கிசை கடற்கரையோரத்தில் சனம் நிரம்பியிருந்தனர். காதலர்கள் ஆங்காங்கே அவர்கள் அவர்களது உலகில் தனிமையாகி இருந்தனர். காதலர் தினத்தை பல்வேறுபட்ட வியாபார நோக்கத்துடன் பலர் விற்பனை செய்து கொண்டிருக்கும் தருவாயில் அதன் உண்மையான உணர்வுடன் அந்த புனிதத்துவ, மனிதாபிமான ஓவியத்தை தீட்டுவதே எமது நோக்கமாகியது.

"காதலின் ஓவியம்" என்ற நிகழ்ச்சி ஆரம்பமாகி சிறிது நேரத்துக்கு பின் கடற்கரையில் ஆங்காங்கே தமது சம்பாஷைனைகளினால் தனிமைப்பட்டிருந்த காதலர்களும் பல் வேறு வயதெல்லையை பிரதிநிதித்துவம் செய்யும் நபர்களும் நாம் நிகழ்ச்சி நடாத்திய இடத்தை சுற்றி வரத் தொடங்கினர். எமது நாட்டில் பிரபல்யம் வாய்ந்த ஓவியர்களும் மற்றும் அவ்விடத்திற்கு வந்திருந்த இளைஞர், யுவதிகளும் கடற்கரையோரத்தில் தயார்படுத்தியிருந்த அட்டைகளில் தமது காதலின் உணர்வுகளை ஓவியமாக தீட்டப்பட்டது. அதேபோன்று சோஷலிச இளைஞர் சங்கத்தின் "ஊர்யுபேநு" வாத்திய குழுவின் இனிமையான இசையும் கலந்த அந்த இன்பமான மாலைப் பொழுதை மறக்க முடியாத நாளாகியதோடு, சீதனமற்ற, விலைமதிப்பற்ற, சாதிவேற்றமையற்ற காதலுக்காக அங்கு கூடியிருந்த அனைவரும் அங்கு நிர்மாணிக்கப்பட்ட பதாகையில் உறுதியளிக்கும் வகையில் தமது கையின் அச்சை பதித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.












# "பேஸ்புக்"தகாத பாவனையால் இன்னுமோர் மரணம்! இரண்டு மாதத்தில் மூன்று மரணம்!

தற்போது பத்திரிகைகள் மற்றும் மின்னஞ்சல் ஊடகங்களில் ர்ழவ நியூஸாக வருவது குயஉநடிழழம பாவனையால் நடைபெறும் தற்கொலைகள் பற்றியதாகும். குருணாகல் மாவட்டத்தின் இடமபெற்ற மாணவியின் தற்கொலையும், எல்பிட்டியாவில் யுவதியொருவரின் தற்கொலையின் காரணமாக **Facebook** "இளைஞர்களின் எமன்" ஆக அறிவிப்பதற்கான பேச்சுக்கள் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவரும் கல்விமான்களின் கருத்து, கெபினட் பேச்சாளர், பொலிஸ் ஊடக பேச்சாளர், இவர்களில் பெரும்பாலோனரின் கருத்தாக இருப்பது குயஉநடிழழம தடைசெய்வது, கட்டுபடுத்தல், சுயக்கட்டுப்பாடு முதலாக கொண்டுள்ளது. "கல்விமான்களின் கருத்து" இரண்டு வகையாக அமைந்திருந்தது. இதில் தவறு குயஉநடிழழம அல்ல தாங்களே தான் இந்த் தற்கொலைகளுக்கு பொறுப்பு கூறியாக வேண்டும். (அது கெபினட் பேச்சாளரின் கருத்தைவிட மிக மூர்க்கத்தனமானதாகும்)

குயஉநடிழழம 2008,2009களிலேயே வந்தது. அதற்கு முன்னர் நமது நாட்டு பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் தமது காதல் தொடர்புகளை கொண்டிருந்தது எப்படி? கையடக்க தொலைபேசியில், அதற்கு முன்னர் இவைகள் நடந்தத எப்படி? கடிதங்கள் மூலமாக, அண்மையில் வெளியான 'சங்தவனி' (சிங்களத் திரைப்படம்) முழுமையாக அமைந்திருப்பது மற்றவர்களின் காதல் கடிதங்கள் கிடைத்த ஓர் இளைஞனின் வாழ்க்கையை பற்றிய கதையாகும். இப்போது சாவது குயஉநடிழழமகினால் என்றால் கடிதம் "காதல் கடித எமன்" காரணமாக தொலைபேசியின் காரணமாக எத்தினை ஆயிரம்பேர் தற்கொலை செய்துகொண்டிருப்பர்? அபப்டியானல் தடைசெய்ய வேண்டியது தொலைபேசி, அல்லத காதல் கடிதம், அல்லது எழுத்து எழுதுவது!

இலங்கையில் உலகத்தில் கூடுதலான தற்கொலை செய்துகொள்ளும் நாடுகளில் 5ம் இடத்தில் இருக்கிறது. குயஉநடிழழம வருமுன்னரும் அப்படிதான். இலங்கையில் உளவியல் துறையை சார்ந்த வைத்தியர்களின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டவாறு ஒரு இளைஞன் தற்கொலை செய்துகொள்ளும்போது 20 இளைஞர்கள் தற்கொலைக்காக முயற்ச்சிக்கின்றனர். 100 பேர் தற்கொலை செய்துகொள்வதற்கு நினைக்கின்றனர். அதாவது இலங்கையில் வருடத்திற்கு 4000 பேர் தற்கொலை செய்துகொள்ளும்போது 80000 பேர் அதற்காக முயற்ச்சிக்கின்றனர். 4000000 பேர் சாக நினைக்கின்றனர். அது ஏன்? அவைகள் பற்றி பத்திரிகைகளில் எழுதுவதில்லை. புத்திஜீவிகளால் கூறப்படவில்லை. நீங்கள் சிந்தியுங்கள்.




# Power to the people
# அதிகாரம் மக்களுக்கு

அண்மையில் பொரல்லை வனாதமுல்லை வீட்டுப் பிரச்சினையின் காரணமாக ஆட்கடத்தல் ஒன்று இடம்பெற்றது. அதை காரணமாக கொண்டு பிரதேச மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொரல்லை பேஸ்லைன் வீதி முழுவதும் மக்கள் நிறைந்து வழிந்தனர். அரசாங்கம் பாதுகாப்பு படைகளை பிரயோகித்து ஆர்பாட்டக்கார்களை களைப்பதற்காக தண்ணீர் பீச்சியடித்தும், கண்ணீர் புகை தாக்குதல் நடத்தியும் அடக்குமுறையை ஏவினர். அவைகளை பொருட்படுத்தாத மக்கள் தமது சகாவை கொண்டு வந்து தரும்வரையில் அகழப் போவதில்லையென கூறினர். அதனால் பொலிஸ் ஊடக பேச்சாளர் இன்னும் சில மணி நேரத்தில் கொண்டு வந்து தருவதாக உறுதியளித்தார். அதன் பின்னர் சுமார் ஒரு மணி நேரத்தில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இதிலிருந்து தெரிய வருவது அரசாங்கத்தின் காடையர் கும்பலால் அவர் கடத்தப்பட்டுள்ளார் என்பதாகும்.

அரசாங்கத்தின் சண்டியன் எனக் கருதப்படும் துமிந்த சில்வா இங்கு வருகை தந்தார். ஆனால் வனாதமுல்லை மக்கள் அவரை விரட்டி விரட்டி துரத்தியடித்தனர். அவரது பாதுகாப்பு பிரிவினர் ஒன்றும் செய்ய முடியாதவாறு மக்களின் ஊ□ சத்தத்தின் முன்னால் ஒடுவதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் செய்ய முடியாது போனது.

இந்த சம்பவத்துடன் நினைவுக்கு வந்தது உலகில் மக்களின் பேராதரவைப் பெற்ற ஜோன் லெனன் எனும் பாடகர். அவரது பாடலொன்றில் "ழறநச வழ வாந "நழிடந என்று கூறப்படுகிறது. அப்பாடலில் அவர் கூறுவதாவது மக்களுக்கு அதிகாரம் நாம் சரியான பாதையில் செல்ல வேண்டும்.. நீங்கள் உங்களது சொந்த காலில் எழுந்து சரியான பாதைக்கு வாருங்கள்.. என்பதே அதன் கருத்தாகும்.

இந்த சம்பவம் தற்செயலான ஒன்றல்ல. இதை தான் மக்கள் அதிகாரம் என கூறபப்டுகிறது. மக்கள் ஒன்றிணைந்தால் எதை செய்ய முடியாது, நாமது நாட்டில் இப்போதிருக்கும் கெசினோ, குடு (ஹெரோயின்) எத்தனோல் கொண்டுவரும், மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் இந்த ஊழல் மலிந்த ஆட்சியை விரட்டுவதற்கு மக்கள் ஒன்றிணைந்தால் முடியுமென்பதை வனாதமுல்லை மக்கள் நரூபித்துள்ளனர். அதேபோன்று நாட்டின் பிரச்சினைகளுக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் எவ்வகையான சர்வாதிகாரியையும் வீட்டிற்கு அனுப்ப முடியும் என்து தெளிவு. சிறந்த பாடகர் ஜோன் லெனன் இப்பாடலில் மேலும் கூறுவதாவது மக்கள் ஒன்றிணைவார்களென்றால் மக்களை ஒடுக்கும் முறைமையையும் அழித்தொழித்து புதியதோர் சமூகத்தை உருவாக்க முடியுமென்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரீமியா, இலங்கை: ஒரே இனப் பிரச்சினை, இரண்டு பரிமாணங்கள்

இலங்கையில் யாழ் குடாநாடு, ரஷ்யாவில் கிரீமியா குடநாடு : இரண்டுக்கும் இடையில் இனப் பிரச்சினை தொடர்பாக நிறைய ஒற்றுமைகள் காணப்பட்ட போதிலும், நமது வலதுசாரி தமிழ் தேசியவாதிகள், உக்ரைனிய பேரினவாதிகளை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது ஏன்?

உக்ரைன் பிரச்சினை குறித்து, எந்தவொரு மேற்கத்திய ஊடகமும் உங்களுக்கு சொல்லாத தகவல் இது. உக்ரைனில் நெருக்கடி நிலைமை தோன்றியதற்கு மூல காரணம், ஜனாதிபதி யனுகோவிச் பதவியில் இருந்து அகற்றப் பட்டது அல்ல. ரஷ்ய சிறுபான்மையினத்தை பாதுகாக்கும் சட்டம் நீக்கப் பட்டது தான், இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம். 2012 ம் ஆண்டு, உக்ரைனில் ரஷ்ய மொழி பேசும் சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், ரஷ்ய மொழியை உத்தியோகபூர்வ மொழியாக பிரகடனப் படுத்தும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அது கடந்த இருபதாண்டு கால மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமைந்தது.

தற்போது ஆட்சியமைத்திருக்கும் உக்ரைனிய பேரினவாதிகளின் அரசாங்கம், அந்த சட்டத்தை வாபஸ் பெற்றது. நாடு முழுவதும், உக்ரைன் மொழி கட்டாயமாக்கப் பட்டது. இது ரஷ்ய மொழி பேசும் மக்கள் அறுதிப் பெரும்பான்மையாக வாழும் கிரீமியா பிரதேசத்தில் கொந்தளிப்பை உண்டாக்கியது. அதற்குப் பிறகு தான், கிரீமியாவில் ரஷ்ய சிறுபான்மையின மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். தமது பிரதேசத்தை உக்ரைனிய பேரினவாதிகளிடம் இருந்து பாதுகாக்கும் பொருட்டு, ஆயுதக் குழுக்களை அமைத்துள்ளனர்.

வருகிற மார்ச் 16 ம் தேதி, கிரீமியா தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. கிரீமியா உக்ரைனுடன் தொடர்ந்திருக்க வேண்டுமா, அல்லது ரஷ்யாவுடன் சேர வேண்டுமா என்று அந்த வாக்கெடுப்பு நடத்தப்படும். இந்த இடத்தில், மக்களை ஏமாற்றி வரும், வலதுசாரி தேசியவாதிகளின் இரட்டை வேடத்தை அவதானிக்கலாம். தமிழீழத்திற்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென கோரும் தமிழ் தேசியவாதிகள், கிரீமியாவின் நிலைப்பாட்டை எதிர்ப்பது ஏன்? மேலும், தமிழர் பிரச்சினையும், கிரீமியா ரஷ்யர் பிரச்சினையும், ஒரே இனப் பிரச்சினையின் இரண்டு பரிமாணங்கள் என்பதை உணரத் தவறி விடுகின்றனர். அதற்கு அவர்களுக்கு கிடைத்த தகவல் போதாமை காரணம் என்று சொல்லித் தப்ப முடியாது.




உக்ரைனில், உக்ரைனிய மொழி மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டமை, இலங்கையில் சிங்கள மொழி கட்டாயமாக்கப் பட்ட காலத்துடன் ஒப்பிட்டு நோக்கத் தக்கது. அன்று சிங்களம் மட்டும் சட்டத்தின் விளைவாக, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ் குடாநட்டில் (கிரீமியாவும் ஒரு குடாநாடு தான் என்பது ஒரு அதிசயத் தக்க ஒற்றுமை.) கிளர்ச்சி ஏற்பட்டது. கிரீமியாவில் நடந்ததைப் போன்று, யாழ்ப்பாணத்திலும் மொழிப் பிரச்சினை காரணமாக ஆயுதக் குழுக்கள் உருவாகின. விடுதலைப் புலிகள் இயக்கம் அதில் ஒன்று. ஆரம்பத்தில் இந்தியா அந்தக் குழுக்களுக்கு, ஆயுதமும், பயிற்சியும் வழங்கி வளர்த்து வந்தது.

இன்று கிரீமியா விவகாரத்தில் ரஷ்யா நடந்து கொள்வதைப் போன்று, அன்று ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா நடந்து கொண்டது. கிரீமியா ரஷ்யர்கள் போன்று, யாழ்ப்பாணத் தமிழர்களும் இந்தியா படையெடுத்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். பேரினவாதிகளும், அதை எதிர்க்கும் குறுந் தேசியவாதிகளும் உலகம் முழுவதும் ஒரே மாதிரித் தான் நடந்து கொள்கின்றனர். தமிழ் தேசியவாதிகளுக்கும், கிரீமிய ரஷ்ய தேசியவாதிகளுக்கும் இடையில், இந்த விஷயத்தில் நிறைய ஒற்றுமைகள் காணப் படுகின்றன. ஆனால், இரண்டினதும் புவியியல் அமைவிடம் மட்டுமே வித்தியாசம்.

உக்ரைனில், ரஷ்ய மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிரீமியா குடாநாடு, உக்ரைனில் இருந்து பிரிந்து செல்வதற்கான பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. ஏற்கனவே, கிரீமியா பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள், ரஷ்யாவுடன் சேர்வதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். எதிர்வரும் மார்ச் 16 ம் தேதி, பொது மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்படும். அநேகமாக, கிரீமியாவில் அறுபது சதவீதமான ரஷ்ய மொழி பேசும் மக்கள் வாழ்வதால், அவர்களும் ரஷ்யாவுடன் சேர வேண்டுமென்று தான் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இதற்கிடையே, நடைபெறவிருக்கும் பொது வாக்கெடுப்பு "சட்ட விரோதமானது" என்று, உக்ரைனிய இடைக்கால அரசின் பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும், கிரீமியா தொடர்பான வாக்கெடுப்பு, உக்ரைன் முழுவதும் நடத்தப் பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். அவ்வாறு, பொது வாக்கெடுப்பு உக்ரைன் நாடு முழுவதும் நடத்தப் பட்டால், பெரும்பான்மை உக்ரைனியர்கள் பிரிவினைக்கு எதிராகத் தான் வாக்களிப்பார்கள்.

இந்த இடத்தில், கிரமியா பிரச்சினைக்கும், தமிழீழ பிரச்சினைக்கும் இடையிலான ஒற்றுமையை எடுத்துப் பார்க்கலாம். தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தப் பட வேண்டும் என்பது, வலதுசாரி தமிழ் தேசியவாதிகளின் நீண்ட காலக் கோரிக்கை ஆகும். அவ்வாறு ஒரு வாக்கெடுப்பு நடத்தப் பட்டாலும், ஸ்ரீலங்கா அரசின் எதிர்வினை, தற்போது உக்ரைனிய பிரதமர் கூறியது போன்றிருக்கும். அதாவது, தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு, இலங்கை நாடு முழுவதும் நடத்தப் பட வேண்டும் என்று அரசு பிடிவாதமாக இருக்கும். அவ்வாறான பொது வாக்கெடுப்பில், பெரும்பான்மை சிங்கள மக்கள் (உக்ரைனிய மக்கள் போன்று) தமிழீழ பிரிவினைக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்பதை இங்கே சொல்லத் தேவையில்லை.

மேலும், கிரீமியா பிராந்தியத்தில் ரஷ்யர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும், அங்கே வேற்றின மக்களும் வாழ்கின்றனர். கிரீமிய சனத்தொகையில் மூவின மக்களின் விகிதாசாரம் பின்வருமாறு: ரஷ்யர்கள் 58%, உக்ரைனியர்கள் 24%, (முஸ்லிம்) டாட்டார்கள் 12%. ரஷ்யர்கள் கிரீமியா பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தாலும், அங்கு வாழும் உக்ரைனியர்களும், டாட்டார்களும் எதிர்த்து வாக்களிப்பார்கள். அவர்கள் எப்போதும் உக்ரைனுடன் சேர்ந்திருக்கவே விரும்புகின்றனர்.

தமிழீழத்திலும், கிட்டத்தட்ட இதே

11ம. பக்கத்திற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நாடகத்தில் தொழிலாளர்களின் பங்கும்! தேயிலை உற்பத்தியில் இலாபத்தின் பங்கும்!

சப்ரகமுவ மாகாண தேர்தல் கால கூட்டமைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட மலையக கூட்டணிகள் மத்திய மாகாணத்தில் மஹிந்தரின் கூட்டணியுடன் தமிழ் பிரதிநிதித்துவத்தை மேலும் தக்க வைத்துக்கொண்டதுடன் மேல்மாகாணசபை தேர்தலில் யானைக்கு சுருக்கிடும் அணியாக மாரியுள்ளது. தேர்தல் மேடைகளில் பேசப்படும் வசனங்கள்தான் தமிழ் பிரதிநிதித்துவம் என்னும் கோசமாகும். தமிழ் பிரதிநிதிகள் இருந்தால்தான் மலையகத்தில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்ற மந்திர வசனங்களை 108 முறை இ தொ கா ஓதிவருகின்ற நிலையில் (மலையகத்தில் மண்ணைக்கவ்விய மனோவின் அணி பாரிய விளம்பரத்துடன் மேல் மாகாணத்தில் 80 வீத வாக்களிப்பு என்ற வடமாகாணசபை தேர்தல் பற்றிய பிதற்றலை கூறிவருகின்றது.) மக்களும் அதற்கு ஏமாந்தே விடுகின்றனர். அதாவது மாகாண-சபை, பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற மக்கள் நிறுவனங்களை தமது பிரதிநிதிகள் என்ற உணர்வுடன் அலங்கரிக்கின்றனர். இது மலையகத்தின் மறுகாலனியாதிக்க மீட்பாகும்.

நாரிப்போன முதலாளித்துவத்தில் உழைக்கும் மக்களை பங்பாளிகளாக்கி குளிர்காயும் முதலாளித்துவ ஏஜென்டுகள் இவ்வாறான தாரக மந்திரத்தை பின்பற்றுவதை தவிர்க்க முடியாது. அதாவது முதலாளித்துவம் நலிவடையும்போது அதை தூக்கி நிமிர்த்த போலி ஜனநாயக நடைமுறை நிறுவனங்கள் அரசியல-ில் பிரதான பாத்திரம் வகிக்கின்றது. மக்களின் தொடர்ச்சியான வரலாற்று வாழ்வியலில் தொடர் ஏமாற்று மெகா டி.வி நாடகங்களைப் போன்றதாகும். பார்த்து முடித்த பகுதி நாடகத்தைவிட இறுதியில் போடப்படும் தொடரும், ஒன்ற உப்புச்சப்பற்ற வசனத்துக்கு பார்வையாளர்கள் இறையாவதைப்போல் போலி ஜனநாயகம் என்னும் நாரிய கந்தளை திருப்பித் துவைத்துக் காட்டுவது தேர்தல்கால திருவிளையா-டலாகும்.

அது சப்ரகமுவ மாகாணத்தல் தமிழ் பிரதிநிதிகள் கோசமாக ஆரம்பித்து மத்திய மாகாணத்தில் மஹிந்தரின் ஆதரவு சார்ந்த கோமாளி அணியா-கவும், கொந்தரத்து அணியாகவும் மாறி தற்போது மேல் மாகாணத்தையும் விட்டு வைக்கவில்லை. தமிழர்களின் உரிமைகள் பற்றி பேசும் அணியோன்றாகவும், தலைநகர இந்திய வம்சாவழி என்ற அண-ியாகவும், மேல் மாகாண தோட்டத் தொழிலாளர்களை இலக்கு வைத்து அபிவிருத்தி என்ற தொனியையும் முன்னிறுத்தி தேர்தல் களம் மஹிந்தரின் சகாக்களால் பிளவுபடுத்தப்பட்டுள்ளது என்பது யதார்த்தமாகும். தேர்தல் முடிவுற்ற மாகாணங்களில் வாழும் தோட்டப்புற மக்களை தற்போது இவர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. பழைய குருடி கதவை திறடி என்ற என்ற பழைய பல்லவிதான். முதலாளித்துவ அமைப்பில் பாதுகாப்பு அரணாக செயல்படும் இந்த நிறுவனங்கள ஒரு சாராரை மட்டும் பணக்கார குபேர்களாக மாற்றிவிடும் சந்தர்ப்பத்தில் ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளை சட்டியில் இருந்து அடுப்பில் தள்ளிவிடுகின்றது. மீண்டும் தோட்டத் தொழிலாளர்களின் பழைய பல்லவி நிறந்தரமாகவே ஆரம்பிக்கப்படுறது. வறுமை, பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச்சுமை, வீடில்லாப் பிரச்சினை மற்றும் கலாச்சார சீரழிவு என்பவை வேகமாக நீண்டு செல்கின்றன. அடிமட்ட உழைப்பு சக்திகளாக விளங்கும் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார சுமை-களை எதிர்கொண்டு தம் வாழ்வில் எதிர்கொள்ளும் இன்னல்களை பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்ப்பதில்லை. அதுதான் பாரிய பிரச்சினையாகும். வெறும் உழைப்பாளிகளாக தோட்டங்களை நம்பி அதை தமது சொர்க்கா புரியாக நினைத்து அதில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் தலைமைகள தெய்வமாக கருதுவதும். தம் வாழ்வியலின் அபிவிருத்து என்னும் வருமையை மேலும் அதிகரிக்கிறது.

இந்த நிலையில் பெருந்தோட்டங்கள் மக்கள் மயம் என்னும் போர்வையில் தனியாரின் கைகளில் சிக்குண்டு. சீரழிந்து உதவாக்கரையாக மாரியுள்ள நிலையில் எஞ்சியுள்ள அரச தோட்டங்கள் ஜனவசம என்னும் போர்வையில் சூனியமாக்கப்பட்டுள்ளது. உழைப்புக்கேற்ப வேதனம் இலலை. தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் யாகும் மறுக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி தோட்டங்கள்பல தேயிலை பயிர்ச்செய்கையில் இருந்து மாறி மாற்று பயிர்ச்செய்கை என்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. அதுவும் சரிவராத நிலை பற்றைகளாக மாறியும்வருகிறது. அவ்வாறு மாறிய பற்றை நிலங்கள் உல்லாசப் பயணத்துறைக்கு விடுதிகள், ஹோட்டல்கள் நிர்மானிக்க விடப்பட்டுள்ளன. அதனோடு இணைந்த தோட்டதுரைமார்களின் பங்களாக்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் ஹோட்டல்களாக மாறுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.





இந்நிலைமையால் தோட்டத் தொழிளாளர்கள் செய்வதரியாது தவிக்கின்றப்போதிலும் மாற்று நடவடிக்கை அல்லது மாற்று திட்டம் என்ன என்பதைபற்றி அலட்டிக்கொள்வதில்லை. அதன் பிரதிபலனாக எஞ்சியிருக்கும் பெருந்தோட்டங்கள் சிறுதோட்டங்களாக மாறிவருகிறது. 1985ம் ஆண்டு இரண்டு இலட்சத்து 31 ஆயிரம் ஹெகடேயா் பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அது தற்போது இரண்டு இலட்சத்து ஆராயிரத்து 104 ஹெக்டேயராக மாறியுள்ளது. அதில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து 664 ஹெக்டேயர் நிலத்தில் தேயிலை பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றனர்.

அத்துடன் இடைநடுவ-ில் தோட்ட கம்பனிகள் வேறு கம்பனிகளுக்கு தோட்டங்களை கைமாற்றுகினறனர். இடைநடுவ-ில் கைமாற்றப்படும் தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய EPF.ETF போன்றவையும் இல்லாதொழிக்கப்படுகின்றன. இன்று அநேக கம்பனிகள் இந்த சித்து வித்தைகளை காட்டிவருகிறது. உதாரணமாக பதுளை மாவட்டத்தின் நமுனுகுல பிளாண்டேசனால் நிர்வாகிக்கப்பட்ட தோட்டங்கள் ரோயல் டி நிறுவனத்தால் பொறுப்பேற்றப்போது அத்தொழிலாளர்களுக்கு கிடைக்கப்படவேண்டிய EPF.ETF போன்றவை இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான உதாரணங்கள் ஏராளம்.

தேயிலை உற்பத்தி படிப்படியாக உயர்ந்து வருகின்றது. அதாவது கடந்த 10 வருடங்களை நோக்குகையில் ஆசியாவில் உற்பத்தி வளர்ச்சியில் 4ம் இடத்தை பிடித்துள்ளது. 1945ம் ஆண்டு 125.6 மில்லியன் கி.கிறாமாக இருந்த உற்பத்தி 2012ம் ஆண்டு 328 மில்லியன் கிலோவாக அதிகரித்துள்ளது. அத்துடன் அந்நிய வருவாயாக 1969ம் ஆண்டில் 57.8 பங்காகும். 2013ம் ஆண்டில் 1.54 பில்லியன் டொலர் வருவாயாக தேயிலை உற்பத்தியில் கிடைத்துள்ளது. அதாவது 2013ம் ஆண்டில் மட்டும் 0.15 பில்லியின் டொலர்கள் வருவாயாக அதிகரித்துள்ளது. இவ்வாறு தேயிலை உற்பத்தி அதிகரிப்பும், விலை அதிகரிப்பு அதனோடு இணைந்த வருமான அதிகரிப்பும் எந்த விதத்திலும் தொழிலாளர்களை சென்றடைவதில்லை. தேயிலை உற்பத்திதுறையில் ஏற்படும் வளர்ச்சியைப் பயன்படுத்தி தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலை மேம்படுத்த இது வரை இந்நாட்டை ஆட்சிசெய்த கறுப்பு முதலாளிகள் முன்வரவில்லை. பொருளாதார ரீதியாக தோட்டத் தொழிலாளர்களை முன்னேற்றுவதற்குப் பதிலாக கருத்தியில் ரீதியாக அவர்களை கருத்தியல் அடிமைகளாகவும், பொருளாதார அடிமைகளாகவும் பயன்படுத்தியே வருகின்றனர். அதன்விளைவுகள் எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களை மறுகாலணியாதிக்க நிலைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க முடியாது.

அந்த நிலைமையில் இருந்து மீள வேண்டுமாயின் நாளை தினத்தை பற்றி தோட்டத் தொழிலாளர்கள் நன்கு சிந்தித்தாக வேண்டும். சமுதாயத்தின் அளவீடுகளில் 8அடி காம்பிரா நிலை மாற வேண்டும். சமூதாயம் புதிய பரிணாம மாற்றத்துடன் முன்செல்ல வேண்டும். எதிர்கால சமுகத்தினருக்கு சிறப்பான எதிர்காலத்தை உரித்தாக்க வேண்டும். அதற்கு தடையாக இருப்பது தற்போது நம்முன்னுள்ள முதலாளித்துவ சமூக கட்டமைப்பாகும் போலி ஜனநாயக திரைமரைவில் இருந்து செயற்படும் தேர்தல் முறையால் நாம் தெரிவு செய்யும் நிறுவனங்கள் அல்ல என்பதை ஒட்டுமொத்த தோட்டத் தொழிலாளர்கள் கருத்தில் கொளள வேண்டும். அதற்கு முன்னர் இந்த முதலாளித்துவம் உழைக்கும் வர்க்கத்துக்கு மிகுதியாக விட்டுச் சென்றிருப்பது என்ன என்பதை பற்றி சிந்திக்க வேண்டும். அது மனித ஏற்ற தாழ்வு, வறுமை, துன்பம், துயரம், ஏழ்மை போன்றவையாகும் எனவே அதற்கு மாற்றீடாக மனிதன் மனிதனாக வாழும் சோசலிஸ சமூக கட்டமைப்பை உருவாக்க முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியாக 5ம் பக்கம்

பயன்படுத்தவுள்ளனர் உண்மையில் இந்த மாகாண சபைத் தேர்தல் என்பது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பரீட்சித்து பார்க்கும் தேர்தல் களமாகும். அதனால் இதில் வெற்றிபெறுவது ராஜபக்ஷாக்களின் அத்தியாவசிய தேவையாகும். நாட்டிற்கு எதிராக வரும் ஆபத்தினைக் கூட இதற்காக பலியிடும் அளவுக்கு அரசாங்கம் கீழ்த்தரமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

அதங்கிணங்க மார்ச் மாதம் இறுதியில் நடைபெறும் இரண்டு வாக்கெடுப்புகளும் நாட்டு மக்களுக்கு தீர்க்கமான ஆபத்து நிறைந்தவைகளாகும். மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் பற்றிய வாக்கெடுப்பில் அமெரிக்கா வெற்றிபெறுமானால் அது நீண்டகாலத்திற்கு இலங்கைக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். அது எதிர்கால ஏகாதிபத்தியத்தின் தலையீட்டுக்கு ஆரம்ப நுழைவயிலாக அமையும். இலங்கை ஏகாதிபத்தியத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியும் ஆபத்து அதில் அடங்கியிருக்கிறது. அதேபோன்று மார்ச் 29 திகதி மாகாணசபைத் தேர்தலில் ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் வெற்றிபெற்றால் அதுவும் மக்களுக்கு தீங்கானதாகவே அமையும். அதன்மூலமாக குடும்பவாத, சர்வாதிகார, ஆட்சி நீடிப்புடன், நாடு மிக மோசமான தான்தோறித்தனமான எதேச்சதிகார சர்வாதிகார ஆட்சிக்கு இறையாக நேரிடும். அதன்படி ஒருபுறத்தில் இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் தலையீட்டின் ஆபத்தும், மறுபுறத்தில் நாட்டில் சர்வாதிகார ஆட்சியின் ஆபத்தும் ஒரே நேரத்தில் தோன்றியுள்ளது. இந்த இரண்டு ஆபத்துகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிறது. எகாதிபத்தியவாதிகளுக்கு நாட்டை தாங்களது கட்டுக்குள் கொண்டு வருவதற்கு சர்வாதிகார ஆடசி தோன்றுவதுடன் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு அவ்வாறு ஆவதற்கு ஏகாதிபத்தியமும் தோன்றும்.

இவ்வாறு மார்ச் மாதம் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ள இரண்டு வாக்கெடுப்புகளும் அதன் மூலம் ஏற்படும் இரண்டு ஆபத்துகளுக்கு எமது நாட்டு மக்கள் முகம்கொடுத்துள்ளனர். இந்த இரண்டு ஆபத்துக்களையும் ஒரே தடவையில் தோற்கடித்தாக வேண்டும். ஒன்றை மட்டும் தனியாக எடுத்து தோற்கடிக்க முடியாது. மகிந்த ராஜபக்ஷாக்களின் சர்வாதிகார குடும்ப ஆட்சியை தோற்கடிப்பதற்கு தற்காலிகமாக ஐக்கிய அமெரிக்காவின் தேவைகளுடன் கரங்கோர்த்துக் கொள்வதென்பது, தவறான அரசியல் முடிவை போலவே, ஐக்கிய அமெரிக்காவின் தலையீட்டை தோற்கடிப்பதென்று ராஜபக்ஷாக்களின் சர்வாதிகார குடும்ப ஆட்சியுடன் கரங்கோர்த்து கொள்வதென்பது ஒரே விதமான அரசியல் தவறுகளாகும். அதனால் இப்போது தேவைப்படுவது ஏகாதிபத்தியத்தின் தலையீட்டையும், சர்வாதிகார குடும்ப ஆட்சியையும் ஒன்றாகத் தோற்கடிக்க கூடிய மக்கள் சக்தியை உடனடியாக கட்டியெழுப்புதேயாகும். அவ்வாறான மக்கள் சக்தியை கட்டியெழுப்ப முடிவது அவ்வாறான மக்கள் சக்திக்கு தலைமைத் தாங்க முடிவதும் உண்மையாகவே ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசப்பற்றுள்ள மற்றும் சர்வாதிகார குடும்ப ஆட்சிக்கு எதிரான அரசியல் சக்திகளுக்கு மட்டுமேயாகும். அதை இப்போது நிறைவேற்ற முடிவது வேறு எவருக்குமல்ல மக்கள் விடுதலை முன்னணிக்கு மட்டுமேயாகும்.

நாட்டின் முன்னால் தோன்றியுள்ள ஏகாதிபத்தியத்தின் தலையீட்டிற்கும், சர்வாதிகார குடும்ப ஆட்சியின் ஆபத்தினையும் ஒன்றாகத் தோற்கடிப்பதற்காக இந்நாட்டில் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள், தேசப்பற்றாளர்கள், ஜனநாயகவாதிகள், இப்போது கரங்கோர்த்துக் கொள்ள வேண்டியிருப்பது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியுடன் அல்ல. மக்கள் விடுதலை முன்னணியுடனாகும். அதேபோன்று வென்றெடுக்க வேண்டியிருப்பது அரச ஆட்சியாளர்களை அல்ல மக்கள் விடுதலை முன்னணியையாகும். அதனால் நாட்டிற்கு பாதகத்தை ஏற்படுத்துகின்ற மக்கள் சர்வதேசம் மற்றும் தேசிய எனும் இரண்டு பக்கங்களிலும் தோல்வியடைவதற்கு இடமிருக்கின்ற மார்ச மாதத்தில் மக்கள் வெல்லும் மாதமாக மாற்றியாக வேண்டும். அது மார்ச 29 திகதி ஏகாதிபத்தியத்திற்கு, சர்வாதிகார குடும்ப ஆட்சிக்கும் எதிராக மக்கள் விடுதலை முன்னணியை பலப்படுத்துகின்ற தீர்மானத்தை எடுப்பதன் மூலமாகும். அதனால் மார்ச் மாதம் 29ம் திகதி ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், ராஜபக்ஷாக்களின் சர்வாதிகார குடும்பவாதத்தினதும் எதிர்கால ஆபத்தினை தோற்கடிப்பதற்கு முதலாவதும் முக்கியமானதுமான அடியெடுத்து வைக்கும் நாளாக மாற்றியமைத்தாக வேண்டும்.

## கிரீமியா, ஈழம்: 9ம் பக்கம்

மாதிரியான, மூவின மக்களின் பிரதிநிதித்துவத்தை காணலாம். அங்கே தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் குறைந்தது 24% சனத்தொகையை கொண்டுள்ளனர். (கிரீமிய டாட்டார்கள் போன்று, ஈழத்து முஸ்லிம்களும் தனியான இனமாகவே கருதப் படுகின்றனர்.) ஆகையினால், வடபகுதியில் வாழும் முஸ்லிம்களும், சிங்களவர்களும், பிரிவினைக்கு எதிராகவே வாக்களிப்பார்கள்.

ஸ்ரீலங்காவுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாக உள்ளது.

இந்த இடத்தில், சட்டம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். உக்ரைன் நாட்டின் அரசியல் நிர்ணய சட்ட மூலம், அது சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த காலத்தில் இருந்து தொடர்ந்திருக்கிறது. முன்னைய சோவியத் ஒன்றியத்தில், இரண்டு வகையான சட்டங்கள் இருந்தன. ஒன்று: எல்லோருக்கும் பொதுவான சோவியத் சட்டம். மற்றது: குறிப்பிட்ட ஒரு குடியரசுக்கு மட்டுமே உரிய தனியான சட்டம்.

சோவியத் அரசமைப்பு சட்டத்தின் படி, ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு குடியரசும், விரும்பினால் பிரிந்து செல்லும் அதிகாரம் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் தான், 1991 ல் உக்ரைன் தனி நாடாக பிரிந்து சென்றது. அன்றைய சோவியத் ஒன்றியத்தினுள், பல்வேறு பட்ட குடியரசுகளும், சுயாட்சிப் பிரதேசங்களும் இருந்தன. அதே மாதிரி, ஒவ்வொரு குடியரசின் உள்ளேயும் இருந்தன. அதாவது, உக்ரைன் பல சுயாட்சிப் பிரதேசங்களைக் கொண்ட சமஷ்டி அமைப்பைக் கொண்டிருந்தது.

கிரீமியாவுக்கு பல விசேட சலுகைகள் வழங்கப் பட்டிருந்தன. உக்ரைன் சமஷ்டி அரசமைப்பு சட்டத்தின் படி, ஒரு சுயாட்சிப் பிரதேசம் விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமையைக் கொண்டுள்ளது. தற்போது கிரீமியாவும், அந்த சட்ட மூலத்தை பாவித்து தான் பிரிந்து செல்ல விரும்புகிறது. ஆகவே, அது சட்டப் படி செல்லுபடியாகும். ஆனால், சில நிபந்தனைகள் உள்ளன. சட்டப் படி பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கு, கிரீமியாவுக்கு உரிமை உண்டு. ஆனால், அவர்களின் முடிவை, உக்ரைனில் உள்ள மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும், என்பது ஒரு முக்கியமான நிபந்தனை. இந்த இடத்தில் பிரச்சினை உண்டாகலாம். ஆகவே, கிரீமியாவின் பிரிவினை முழுமையும் சட்டவிரோதமானது அல்ல. அனால், உக்ரைனிய அரசு விட்டுக் கொடுக்கும் என்றும் தெரியவில்லை.

அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும், கிரீமியா பிரிவினை சட்டவிரோதமானது என்று கூறி வருவது நகைப்புக்கிடமானது. ஒபாமாவுக்கும் மற்ற தலைவர்களுக்கும், உக்ரைனிய சட்டம் தெரியாது என்று நாம் நினைக்கவில்லை. அவர்கள் உலக மக்களை முட்டாளாக்கும் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உக்ரைனிய நிலவரத்தை இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இலங்கையில் ஒருக்காலும் அது போன்ற சட்டங்கள் இருக்கவில்லை. தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பதற்கு, இலங்கை என்றைக்குமே ஒரு சோஷலிச நாடாக இருக்கவில்லை. ஆகையினால், தமிழீழ பொது வாக்கெடுப்புக்கு ஆதரவாக, இலங்கையின் அரசமைப்பு சட்டத்தை உதவிக்கு அழைக்க முடியாது. முதலில் இலங்கையின் சட்டத்தை மாற்ற வேண்டும்.

தனிநாட்டிற்கான பொது வாக்கெடுப்பு தேவை என்று கேட்கும் வலதுசாரி தமிழ் தேசியவாதிகள், சட்டப் பிரச்சினைகளில் அக்கறை காட்டுவதில்லை. மேலும், அவர்கள் யாரும் கிரீமிய பிரிவினையை ஆதரிப்பதாகவும் நாம் கேள்விப்படவில்லை. கிரீமியா பிரச்சினையில், உக்ரைனிய பேரினவாத அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். இது அவர்களது இரட்டை வேடத்தை காட்டுகின்றது. உண்மையில், தனிநாடு, அல்லது தமிழ்த் தேசியம் கூட, அவர்களுக்கு முக்கியம் இல்லாமல் இருக்கலாம். அதை விட, அமெரிக்கா, மேற்குலகிற்கு ஆதரவான அரசியலை முன்னெடுப்பது முக்கியமாகத் தெரியலாம். அதனால் தான், அவர்களை நாங்கள் "வலதுசாரி தமிழ் தேசியவாதிகள்" என்று அழைக்க வேண்டியுள்ளது. இது ஒன்றும் இரகசியம் அல்ல. அவர்களே, அதனை வெளிப்படையாக சொல்லிக் கொள்கின்றனர்.

தனிநாடு அமைந்தால், அது இந்தியாவுக்கு விசுவாசமான நாடாக இருக்கும் என்று, நெடுமாறன், வைகோ போன்ற தமிழீழ ஆதரவாளர்கள் இந்திய அரசுடன் பேரம் பேசினார்கள். காஷ்மீர், அசாம் தனி நாடாவதை ஆதரிக்கும் தமிழீழ ஆதரவாளர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். கொசோவோ பிரச்சினையில், மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டை ஆதரித்தார்கள். கொசோவோ போன்று தமிழீழமும் உருவாக வேண்டும் என்று, மேற்கத்திய அரசுக்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். அதே நேரம், பாலஸ்தீன பிரச்சினையில், இஸ்ரேலை ஆதரித்தார்கள். ரஷ்யா படையெடுப்பின் விளைவாக, ஜோர்ஜியாவில் அப்காசியா, தெற்கு ஒசேத்தியா ஆகிய இரண்டு தனி நாடுகள் உருவானதை கடுமையாக எதிர்த்தார்கள். இப்படி நிறைய உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். ஆகவே, கிரீமியா பிரச்சினையில் மட்டுமல்ல, மேற்குலகம் எதிர்க்கும் எந்தவொரு தனி நாட்டுப் பிரச்சினையிலும், வலதுசாரி தமிழ் தேசியவாதிகள் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பதை நாம் ஊகித்து அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செஞ்சக்தி

# ஜனாதிபதி மகிந்தவின் விருப்பமே நாட்டின் சட்டமாக மாறியுள்ளது.




தற்போது எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் மீது பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தி அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதோடு சட்டம் என்பது இன்று ஜனாதிபதியின் விருப்பமாகியுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க கடந்த 24ம் திகதி வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் ஒன்றியத்தின் முன் கருத்து வெளியிடுகையின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அதேபோன்று யுத்தத்தின் பின் அரசாங்கத்தினால் மேற்கொண்ட தவறான நிலைபாட்டின் காரணமாக இன்னமும் வடபகுதி மக்களின் உரிமைகள் உறுதிபடுத்துவதற்கு பதிலாக இன்னும் இன்னும் அம் மக்களை அளுத்தம் கொடுத்து வருகின்றனர். புலிப்பயங்கரவாதி, சூழ்ச்சிதாரர், போன்ற வார்த்தைகளை பயன்படுத்தி யுத்த வெற்றியின் ஞாபகார்த்தம் போன்றவற்றை இன்னமும் அவர்கள் நடாத்தி வருகின்றனர். இராணுவத்தினரை முகாம்களுக்கு வரையறுத்து வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை உறுதிபடுத்த வேண்டியிருந்தாளும் அரசாங்கம் அதைச் செய்யவில்லை. அது மட்டுமன்றி அப்பகுதியில் கலாச்சார ஆக்கிரமிப்பை நடாத்தி வருகின்றது. வடபகுதி மக்களின் காணிப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக சிங்கள மக்களை அங்கு பலாத்காரமாக குடியேற்றி வருகின்றது. இடம்பெயர்ந்தோரின் பிரச்சினை, காணாமற் போனோரின் பிரச்சினை, தடுப்பில் உள்ளோரின் பிரச்சினை போன்றவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் மேலும் கருத்து தெரிவித்தார்.




எமது நாட்டு பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணியின் 7வது மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைத் திட்டம். தொடர்புகளுக்கு: 0112785612

## காதலின் ஓவியம்





எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமூகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளோ அல்லது வரலாற்றில் நடந்திருக்கும் நிகழ்வுகள் அனைத்தும், வர்க்க நலன்களுக்காக பயன்படுத்துவதற்கு ஆளும் வர்க்கம் செயற்படுகிறது. இன்றைய நாட்களில் மற்றைய நினைவு தினங்களைப் போன்றே “காதலர்” தினத்திற்கும் நேர்ந்திருப்பது அதுவேயாகும். அன்று வெலன்டைன் சுவாமி அவர்கள் ஏழைகளின் காதலுக்காக செய்த தியாகத்தை நனைவு கூறுமுகமாக பெப்ரவரி 14 ம் திகதியை வர்த்தக நிறுவனங்கள் தாங்களது விற்பனை பொருட்களை இளைஞர் யுவதிகளிடையே விற்பதற்கான தினமாக மாற்றியுள்ளனர்.

தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் போட்டிப் போட்டுக் கொண்டு செயற்படுவது அன்றைய தினத்தை அவர்களது நாளாக மாற்றுவதற்காகும் இந்த நிலமைகளின் மத்தியில் சோஷலிச இளைஞர் சங்கம் “விலை இல்லா, சீதனம் இல்லா, ஜாதிகள் இல்லா நாளை” எனும் தலைப்பில் ஏற்பாடுச் செய்திருந்த ‘அன்பின் ஓவியம்’ எனும் செயற்திட்டம் பெப்: 14 மாலைப் பொழுதில் கல்கிச்சை கடற்கரையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெரும்திரளான இளைஞர் யுவதிகள் கலந்துக் கொண்டனர். அவர்களுக்கு அவர்களது ஓவிய படைப்புகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்விற்கு பிரசித்திப்பெற்ற ஓவியக் கலைஞர்களும், அழகியற் பலகலைக்கழக மாணவர்களும் கலந்துக்கொண்டனர். சோஷலிச இளைஞர் சங்கத்தின் Change இசைகுழுவினரால் இந்நிகழ்வு மேலும் மெருகூட்டப்பட்டது. சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்காவும் இதில் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்.

## சமுதாயத்தை புதுப்பிப்பிக்க ஜே.வி.பி தயார்!

இந்நாட்டை புதியதொரு பாதையில் கொண்டு செல்வதற்கு மக்கள் விடுதலை முன்னணியால் மட்டுமே முடியும். இப்போது எமக்கோர் புதிய நாடு தேவைப்படுகிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் முகங்களின் புன்சிரிப்புகள் நிறைந்து காணப்படும் ஓர் சமுதாயம் வேண்டும்.

நாட்டின் அனைத்து பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு செல்லும் ஒரு சூழல். அதற்காக கொள்கைகள் தேவைபடுவதால் அவற்றை நாம் நிர்மாணித்துள்ளோம். நாம் எமது கட்சியை சமுதாயத்துக்கு தேவையான வகையில் மாற்றி கொண்டுள்ளோம். இப்போது மக்கள் மாற வேண்டிய காலகட்டம் வந்துள்ளது. நாம் 48 வருடங்கள் அரசியல் செய்தோம். நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பது பொதுமக்களாகும், எனவே அவசரப் பட வேண்டியது பொதுமக்களே ஆகும். மாவோ சேதுங் ஒருமுறை கூறியிருந்தார், குழியில் விழுவது மூலைக்கு லாபம் என்று. ஆனால் எமது நாட்டு மக்கள் இரவில் விழுந்து குழியில் பகலிலும் விழுகின்றனர். அதனை மூலைக்கு லாபமாக்கிக் கொள்ளவில்லை. எல்லா பொய்களும் உண்மைகளாக மாறியுள்ளது. மக்கள் தொடர்ந்தும் ஏமாறி வருகின்றனர். இந்நாடு வெறும் கட்டுக்கதைகளினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. நாட்டு தலைவர்கள் கட்டுக்கதைகளினால் நிர்மாணிக்கப்பட்டவர்கள். ஆகவே அவற்றுக்கு ஏமாறாமல், நாட்டை புதியதோர் திசையில் கொண்டு செல்வோம். நாம் அனைவரும் புதிய வடிவில் சிந்திப்போம். நாட்டை புதுபிக்க நாங்கள் தயார். நீங்கள் அதற்கு தயாரா? பழைய முறைக்கு பதிலாக புதியதோர் முறையை கட்டியெழுப்புவோம். அப்பயணத்தை இந்த மேடையிலிருந்து ஆரம்பிப்போம். அப்படியானால் இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம்



நாம் அனைவரும் எல்லா உரிமைகளுடன் நிம்மதியாய் வாழக் கூடிய செங்கதிர்கள் உதிக்கும் நாள் வெகுவிரைவில் உதயமாகும். பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா இக்கருத்துக்களை மகரகமவில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

## ராஜபக்ஷ பிள்ளைகளை கொஞ்சினால் மறுநாள் பால்மா விலை உயர்த்தப்படும்.



மகிந்த ராஜபக்ஷ பிள்ளைகளை தூக்கி கொஞ்சும் போது அப் பிள்ளைகளின் பாரத்தை கணிப்பிட்டு அப் பிள்ளைகளுக்கு போஷாக்கு அதிகம் என்று நினைத்தால் மறுநாள் பால்மா விலையை உயர்த்துகிறார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் பா.உ. தோழர் விஜித ஹேரத் கூறுகிறார். இவர் இக்கருத்துக்களை கடந்த 18ம் திகதி கம்பகாவில் நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது தெரிவித்தார். எதிர்வரும் 28ம் திகதி இலங்கை நேரத்தின் படி இரவு 7மணிக்கு ஜெனீவாவில் மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்று கொண்டுவரவுள்ளது. 29ம் திகதியில் மாகாண சபை தேர்தல் எமது நாட்டில் நடக்கவுள்ளது. தேர்தல் தினத்தை திட்டமிட்டது எப்படி என்பது உங்கள் அனைவருக்கும் இப்போ தெளிவாகியிருக்கும். தேர்தல் தினத்தை முதன் முதலில் அறிவித்தவர் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அல்ல, விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா தான் அதை முதன் முதலில் கூறினார். கடந்த காலங்களில் மக்களின் உண்மையான பிரச்சினைகளை இந்த அரசாங்கம் தீர்க்கவில்லை. விலைவாசி, போக்குவரத்து, மின்சாரக் கட்டணம், குறைக்கப்பட்டு, இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு பிரச்சினை தீர்க்கப்பட்டு, விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைத்து எமது வருமானம் அதிகரிக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்து நின்றனர். சுபீட்சமான எதிர்காலம் என்றே இவர்கள் கூறினார்கள். ஆனால் அண்மையில் பால்மாவின் விலையும் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தப்பட்டது. இந்த அரசாங்கத்தின் பிரதான வருவாயாக மாறிவருவது ஹெரோயின், கெசினோ, மதுபானம் தயாரிக்கும் எத்தனோல் போன்றவையாக மாறிவருகின்றது. எனவே இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க முன்வர வேண்டும் என்று அவர் மேலும் கருத்து வெளியிட்டார்.

,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய ... இல 43/43 ... கொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org